# சுந்தர மூர்த்தி நாயனார் யட்சகானம்



பதிப்பாசிரியர் :டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்.), பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,

பொதுப் பதிப்பாசிரியர் : நடன காசிநாதன், எம்.ஏ.,

கீழ்த்திசைச் சுவடிகள் வெளியீடு எண் : 81

# சுந்தரமூர்த்தி நாயனார் யட்ச கா்னம்

*பதிப்பாசிரியர் :*

**டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(ஆங்), பி.எட்., டிப்.வ.மொ. பி.எச்.டி.,

காப்பாட்சியர், அ. கீ. சு. நூலகம்,

சென்னை-600 005.

*பொதுப் பதிப்பாசிரியர் :*

**நடன காசிநாதன்** எம்.ஏ.,

இயக்குநர், தொ. பொ. ஆ. துறை,

சென்னை-600 113.

©

அ. கீ. சு. நூ.

1995

விலை ரூ.60/-

G. O. MSS. SERIES No : 81

# SUNDARAMURTHY NAYANAR YAKSHA GANAM

*Edited by :*
**Dr. S. Soundara Pandian**
M.A.(Tamil),M.A(Eng), B.Ed., Dip, Skt, Ph.D.,
Curator, G.O.M.L.,
Madras - 600 005.

*General Editor :*
**Natana Kasinathan** M.A.
Director, Achaeology Department,
Madras - 600 113.

©
G.O.M.L.
1995

Price Rs.60/-

# பொதுப் பதிப்பாசிரியர் முன்னுரை

அ.கீ.சு. நூலகத்தில் நன்முறையில் பாதுகாக்கப்பட்டு வரும் தமிழ்ச் சுவடிகள் தமிழகத்தின் செல்வமாகும்.

தற்போது இந்நூலகத்திலுள்ள ஓலைச்சுவடிகளில் இது வரை அச்சில் வெளிவராத நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் தமிழக அரசும், தொல்பொருள் துறையும் முனைப்பாகச் செயல்படுகின்றன.

இவ்வகையில்,தமிழக அரசின் பண்பாட்டுத் துறையின் முன்னாள் செயலர் திரு.சா.பா. இளங்கோவன் இ.ஆ.ப.அவர்களும்,தற்போதைய செயலர் திரு. இரா. கிறித்துதாசு காந்தி இ.ஆ.ப. அவர்களும் பாராட்டிற்குரியவர்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறு தமிழில் சிறப்பான வரலாறு ஆகும்; எத்தனையோ ஆய்வுகளுக்கு இவை இடந்தருபவை.

இம்முறையில், தற்போது வெளிவரும் சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம் சிறந்த ஆய்வுப் பொருளாகும். நல்ல இசை நாடகமாகிய இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளவர் டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன், காப்பாட்சியர்,அ.கீ.சு. நூலகம் அவர்களாவார். அவர்களுக்கு என் நன்றி உரியது.

**நடன. காசிநாதன்**

இயக்குநர், தொ. பொ. ஆ. துறை,

சென்னை.

# சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம்
# பதிப்புரை

சுந்தரமூர்த்தி நாயனார் யட்சகானம் எனும் இந்நூல் அ.கீ.சு.நூலக ஓலைச்சுவடியிலிருந்து (எண்.ஆர். 2721) பதிப்பிக்கப்படுவதாகும்.

இந்நூல் இதுவரை அச்சில் வெளிவராதது ஆகும்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றை இசைநாடக வடிவில் அழகுறக் கூறும் நூல் இது.

சுந்தரர் விலாசம் என்ற பெயரில் ஓலைச்சுவடியில் இது வரையப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

வையூர் என்ற ஊரின் அரசன் ஒருவன் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்நூல் எழுந்ததாக நூல் கூறுகிறது. இந்த வையூர் யாங்குளது எனத் தெரியவில்லை; திருவெண்ணெய்நல்லூர்ப் பகுதியில் (தெ.ஆ.மா) உள்ள ஐயூர் அகரம் எனும் ஊராக இருக்கலாம்.

ஓலைச்சுவடியில் குறிக்கப்பட்டுள்ள '' குறிப்பால் இந்நூல் கி.பி. 1848 ஐ ஒட்டிய காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

யட்சகானம் என்பது தமிழுக்கு முற்றிலும் புதிதல்ல; தமிழ்த் தெருக்கூத்தின் ஒரு வடிவமே யட்சகானம்! எனவே யட்சகான நாடக வகைக்கு மூலம் தமிழ்த் தெருக்கூத்தே இருப்பினும் யட்சகானம் என்ற பெயரில் முதன்முதலில் நமக்குக் கிடைப்பது தெலுங்கு யட்சகானமான சுக்கிரீவ விஜயம் (கி.பி.15 ஆம். நூ.ஆ)நூலே.

கன்னட மொழியிலும் யட்சகானங்கள் உள. தேவிதாசா இயற்றிய கிரு ணார்ஜுனா எனும் யட்சகானமே (கி.பி. 17ஆம் நூ.ஆ) கன்னட மொழியில் எழுந்த முதல் யட்சகானம் எனப்படும்.

கன்னட மொழியில்தான் யட்சகானம் முதலில் தோன்றியது என்பார், ஏகலகானா என்ற பாடல் வகையிலிருந்து யட்சகானம் தோன்றிற்று என்பர். யஷகான மகரந்தம் எனும் கன்னட நூலில் Yakshas எனும் கன்னட இனத்தார் பாடி ஆடியநாடக வகையாதலால் இது யட்சகானம் ஆயிற்று என்று ஆயப்பட்டுள்ளது.

தெலுங்கில்தான் முதன்முதலில் யட்சகானம் தோன்றியது என்பார், கி.பி.12ஆம் நூற்றாண்டிலேயே யட்சகானம் பற்றிய குறிப்பு தெலுங்கில் உள்ளது என்பர். ஜெம்காஸ் என்ற தெலுங்கு இனத்தார் ஆடிப்பாடிய நாடக வகையே யட்சகானம் என்பர்.

யட்சகான நூலில் உள்ள திபதை என்ற யாப்பில் அமைந்த பாக்களே, யட்சகானம் என்ற வடிவை, பிற தமிழ்க் கூத்துக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

திபதை என்பது இரண்டிரண்டு அடிகளில் எதுகை பெற்றுவந்து, அடிக்கு நான்கு சீர்கள் கொண்டு நான்காம் சீர், பெரும்பாலும் ஈரசைச்சீராக நடக்கும் ஒரு யாப்பு வடிவாகும், த்விபதா என்று தெலுங்கில் செப்புவர். திபதை யாப்புக்கு அடிவரையறை இல்லை. ஒவ்வோர் அடியிலும் உள்ள நான்கு சீர்களும் தெலுங்கில் அமைவதானால், 'இந்திர கணம், இந்திர கணம், இந்திர கணம், சூரியகணம்' என்ற அமைப்பில் வரவேண்டும் என்பர்; (கணம் - சீர்)

சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றை நாடகமாக நடித்துக் காட்ட விரும்புவோர் இந்நூலைப் பயன் கொள்ளலாம்.

தமிழில் வல்லாளராசன் யட்சகானம், நீலியட்சகானம் ஆகியவை அச்சிடப்பட்டுள்ளன. அச்சில் வராத சில யட்சகானச் சுவடிகள் அ.கீ.சு.நூலகத்தில் உள்ளன.

திருத்தொண்டர் புராணத்தினை அடியொட்டி, வழிவழியாக வழங்கிவரும் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றை வருமாறு எழுதலாம்.

# சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு

கயிலாயத்தில், சிவனும் பார்வதியும் இருந்தனர். அவர்களுக்குத் தொண்டு செய்து கொண்டு அங்கு வாழ்ந்து வந்தார் ஆலால சுந்தரர்.

ஒரு நாள் ஆலால சுந்தரர், சிவன் - பார்வதியாருக்காக பூப்பறிப்பதற்கு நந்தவனம் சென்றார். அங்கே அநிந்திதை, கமலினி என்ற இரு அழகிய பெண்களைக் கண்டார்! அவர்கள் மீது காமம் கொண்டார். அவர்கள் வேறு யாருமல்லர், பார்வதியின் தோழிகள்.

மலரைக் கொண்டு சுவாமி சன்னதிக்குள் சென்றார் ஆலாலசுந்தரர் இவரின் பெண் ஆசையைக் கண்ட பெருமான், "நீ பூலோகம் சென்று இன்பம் அனுபவித்துவிட்டுப் பிறகு இங்கே வரலாம் என்று பணித்தார். பார்வதியும் அப்படியே கூறிவிட்டார்.

இதன் காரணமாக நடுநாட்டைச் சேர்ந்த திருநாவலூர் (தெ.ஆ.மா. சேந்தமங்கலம் அருகே) எனும் ஊரில், ஆதி சைவ பிராமணர் குலத்தில் சடையனார் எனும் தந்தைக்கும் இசைஞானியார் எனப் பெயரிய தாய்க்கும் மகனாகப் பிறந்தார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் பிள்ளைப் பருவத்துப் பெயர் நம்பியாரூரர். இவர் பிள்ளைப் பருவக் காலத்தில் அழகாக இருந்ததால் அந்நாட்டரசன்,நரசிங்க முனைவைராயர் , தந்தை சம்மதத்துடன் ஆரூரை வளர்த்தார்.

பிறகு ஆரூரருக்கு மணம் நிச்சயமாயிற்று புத்தூர் சடங்கவிமறையோன் என்பாரின்மகளை மணப்பதற்காக, மணப்பந்தலில் அமர்ந்திருந்தார் ஆரூரார்.

அப்போது, திருமணம் நடக்கவிடாமல் தடுத்தார் ஒரு முதியவர்! உனக்கும் நமக்கும் ஒரு வழக்குண்டு! அது தீர்ந்த பின் தாலிகட்டலாம் என்றார் அவ்வேதியர்.

"அது என்ன?" - நம்பியாரூரார் கேட்டார்.

"நீ நமக்கு அடிமை; இதோ முறியோலை!" என்று ஓர் ஓலைத் துண்டைக் காட்டினார் அவ்வேதியர்.

அங்குள்ளோர் நகைத்தனர். ஓலையைக் காட்டினார் அப்பிராமண முதியவர்.

உடனே அதை வாங்கிக் கிழித்துப் போட்டார் நம்பியாரூரார்.

முதியவர் விடாது, வாதிடவே, அண்டியிருந்தோர் விசாரித்தனர். "உனக்கு எந்த ஊர்? என்று கேட்டனர். "திருவெண்ணெய்நல்லூர்" என்றார் அப்பிராமண முதியவர். "எனவே அங்கே சென்று வழக்கைக் வழக்கிடுக" என்று அவர்கள் கூறினார்.

புத்தூர்ப் பெண்ணைச் சுந்தரர் மணக்கவில்லை.பிறகு அங்கே ஆரூரருக்குத் தரிசனம் தந்தார் சிவன்.

பிறகு "தலந்தோறும் என்னைத் துதித்துவா" என்று சிவன் கட்டளையிட்டார்.

"பித்தன் என்று என்னை வைததால், அப்படியே ஒரு பாட்டுப்பாடு" என்றார். "பித்தா பிறைசூடி" என்ற பதிகத்தை பாடினார். ஆரூரர்.

ஒரு நாள், திருவதிகையைச் சேர்ந்த சித்தவடமடத்தில் ஆரூரர் தூங்கினார். அப்போது அவரது தலையை ஒரு கால் மிதித்தது. "ஏன் மிதிக்கிறீர்?" என்று ஆரூரர் கேட்டதற்கு, "வயதாயிற்று,தெரியவில்லை" என்று பதில் சொன்னார். கொஞ்சம் தள்ளிப் படுத்தார் ஆரூரர்.அங்கேயும் அப்பெரியவர், காலால் ஆரூரை மிதித்தார்! "நீர் யாரையா?" என்றார் ஆரூரர்! "எம்மை அறிவாயோ?" என்று கூறி மறைந்தார் அவர்! அங்கேயே "தம்மானை" என்ற பதிகத்தைப் பாடினார் ஆரூரர்.

பிறகு சிதம்பரத்தில் வழிபாடு செய்யும் போது, "திருவாரூருக்குவருக" என்று அசரீரி பிறந்தது. அதன்படியே திருவாரூர் சென்றார்.

இஃது இப்படியிருக்க பார்வதி கட்டளைப்படி கமலியார், திருவாரூரில் கணிகை குலத்தில், பரவையார் என்ற பெயரில் வளர்ந்து வந்தாள். ஒரு நாள், சுந்தரர், பரவையாரைக் காணவே அவரை மணக்க விரும்பினார். மணமுடிக்குமாறு சிவனை வேண்டினார். சிவனின் ஆணையைக் கனவில் பெற்றார், பரவையாரைச் சுந்தரருக்கு மணம் செய்து தந்தனர்.

பிறகு, கோளிலி என்று, குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல்லைத் திருவாரூரில் சேர்க்கும் படி பெருமானைக் கேட்டுப் ., பூதகணங்களால் திருவாரூரில் பெற்று, கோட்புலியார் அடிமைகளாகத் தரப்பெற்ற சிங்கடி,வனப்பகை எனும் இரு பெண்களையும் தம் மகள்கள் ஆக்கிக் கொண்டார்.

பிறகு, திருப்புகலூர் சென்று, செங்கல் பொன்னாதல் பதிகம் பாடினார்.

பிறகு, ஒரு நாள் திருமுதுகுன்றடைந்து, பொன் வேண்டினார்; பொன் பெற்று, மணிமுத்தா நதியில் போட்டு, இதைத் திருவாரூர்க் குளத்தில் தரவேண்டும் என வேண்டினார். திருவாரூர் குளத்தில் மூழ்கி வருகையில் பொன் கிட்டவில்லை! பிறகு பதிகம் பாடவே, பொன் கிடைத்தது.

ஒரு நாள் திருக்கருகாவூரில் தண்ணீர்ப்பந்தல் அமுது வைத்துக் காத்திருந்து, ஆரூரர் வந்தும் படைத்து, பிறகு மறைந்தார் சிவன்!

ஒரு நாள் திருக்கச்சூரில்சுந்தரர் பசியால் வாடவே,சிவனே பிராமணராக வந்து, "இங்குள்ள பிராமணர் வீடுகளில் அன்னம் பெற்று வருகிறேன்" என்று சொல்லி, அன்னம் கொணர்ந்து பசியாற்றி, மறைந்தார்!

சுந்தரர் பிறகு திருவொற்றியூர் வந்தார். அங்கு அநித்திதை, சங்கிலியார் என்னும் பெயரில் வளர்ந்து வந்தாள். "இனி மேல் பரவையாரிடம் போகமாட்டேன்" என்று மகிழமரத்தின் அடியில் நின்று சத்தியம் செய்து தந்து, அச்சங்கிலியாரை மணந்தார் சுந்தரர்!

ஒரு நாள் சத்தியத்தை மறந்து, திருவாரூர் செல்லப் பயணமானார்! ஆனால் இரு கண்களும் பார்வை இழந்தன.

பிறகு திருவெண்பாக்கத்தில் சிவனால் கோல் தரப்பெற்றார்.

பிறகு, காஞ்சியில் ஒரு கண் பெற்றார்!. திருவாரூரில், இரண்டாவது கண்ணையும் பெற்றார்!

திருவாரூரில், சிவனையே தூதாக அனுப்பி, பறவையாரின் ஊடலைத் தணித்தார்!

இப்படி இவர் செய்ததைக் கண்டு வெறுத்து இவரது வருகையை அறிந்து உயிர் நீங்கினார் உயர்கோன் கலிக்காம நாயனார்! பிறகு சுந்தரர் அவரை உயிர்ப்பித்துத் தந்தார்!

சுந்தரர் பெருமைகளைக் கேட்ட சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூரில் சுந்தரரோடு நட்புக் கொண்டார். பிறகு, சேரமானோடு சேரநாடும் சென்றார்.

சேரமான் தந்த பொருட்களோடு திரும்புகையில், திருமுருகன் பூண்டிக் அருகில் கொள்ளையர் திருடிக் கொண்டனர். பிறகு சுவாமியிடம் முறையிட,அவற்றைத் திரும்பப் பெற்றார் சுந்தரர்!

ஒரு நாள் திருப்புக் கொளி சென்றார். அங்கே ஐந்து வயதான ஆண்டான்பிள்ளைகள் இருவர் ஏரிக்குச் சென்றனர். ஒருவன் முதலையால் இறந்தானாம்; திரும்பியவனுக்கு உபநயனம் நடந்ததாம்! இருவேறு நிகழ்ச்சிகளால் வேதனை அடைந்து, அந்த ஏரிக்குச் சென்று, முதலையிடமிருந்து பிள்ளையைப் பெற்றுத் தந்தார்சுந்தரர்!

பிறகு திருவஞ்சைக் களம் சென்றார். திருவஞ்சைக்களத்தில் வெள்ளை யானையில் சுந்தரரை ஏற்றி கயிலைக்கு அழைத்துச் சென்றனர்.

திருவஞ்சைக் களத்தில், சேரமானை மனத்தில் நினைத்தாராம் சுந்தரர். அதனால் குதிரை ஏறி, திருவஞ்சைக்களம் வந்த சேரமான், சுந்தரரை வணங்கி இருவருமே திருக்கயிலை சென்றனராம்!

## சுந்தரர் காலம்

சுந்தரமூர்த்தி நாயனாரின் காலம் பொதுவாகக் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு எனப்படும்.

## சுந்தரமூர்த்தி நாயனாரின் சம காலத்தோர்

1. சோமாசிமாற நாயனார்
2. பெருமிழலைக் குறும்பர்
3. விறன்மிண்டநாயனார்
4. கோட்புலி நாயனார்
5. மானக்கஞ்சாற நாயனார்
6. சடையனார்
7. ரயர்கோன் கலிக்காமர்
8. இசை ஞானியார்

இந்நாடகத்தில் வரும் உரையாடல் பகுதிகள் தமிழ்உரைநடை நோக்கில் ஆய்வுக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

மேலும் தெ.ஆ.மாவட்ட ஊர்ப்பகுதி ஆய்வுகளுக்கும் அகச் சான்றுகளும் உள.

தமிழ் இசையில் இந்நூல் குறிப்பிடத் தகுந்ததாகும். இதில் உள்ள தருக்கள் இராக தாளத்திற்கு உட்பட்டு மிக அருமையாகச் செல்லுகின்றன.

இவ்வாறு பல்வழிகளிலும் போற்றத்தகும் இந்நூலை அறிஞர்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.

இவண்,

**டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்**

எம்.ஏ(தமிழ்)., எம்.ஏ(ஆங்)., பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,

காப்பாட்சியர், அ.கீ.சு. நூலகம்.

# சுந்தரமூர்த்தி நாயனார் 'யட்சகானம்

## காப்பு
## நேரிசை வெண்பா

1. காவைநகர் பாலக் கணபதியைப் போற்றி செய்து
மாவை நகர் பிள்ளையாரை வாழ்த்தியே - தேவர்தொழும்
தூயகந்த வேளருளால் சுந்தரர் விலாசத்தை
நேயமுடன் சொல்வேன் நினைந்து!

காவை நகர் - காவனூர் (தெ.ஆ.மா.). மாவை நகர் - மாம்பலப் பட்டு (தெ.ஆ.மா.)

## அகவல்

2. மலர்தலை யுலகில் வளர்தொண்டை நாட்டின்
பலர்புகழ் தெய்வத்துப் பாலிமா நதியின்
வடகரை சிறந்த ... ...
... ... சத்திய வாசகனார்
கயிலைமே லகன்று காசிவந் திருந்து
நயமதா யறங்கள் நாடோறும் புரிந்து
காசிமா நகரைக் கதிவந் திடுமுன்
வாஞ்சையா யுமையாள் வணங்கியே பரவி
முந்துபூ சனனசெய முதல்வனார் பரவின
சந்திர ... செயசந்திர சேகரனார்
மலரடி வணங்கி வாழவந் தவள்தன்
இலைசூழும் கமல யிணையடி தொழுது
விளங்கு சக்கரத்தை வீற்றிருந் தவரை
விளம்பிப் பணிந்து மனதினால் நினைந்து
தந்திமா முகனை தணிகைவாழ் குகனை
சிந்தையால் தினமும் தியானமே புரிந்து
பிராசவெண் தவளப் பெரியதா மரையில்

சரஸ்வதி தாளை சந்ததம் பரவிச்
சுந்தரத் தம்பிரான் தோழ ராரூரன்
செந்தமிழ் பாடத் திருத்தொண்டர் தொகையில்
சாத்திய சரணபங் கயத்தைப்
போற்றியே பணிந்து புகழ்ந்திடு வேனே!

(தொண்டை நாடு - தற்போதைய சென்னை,செங்கற்பட்டு மாவட்டப் பகுதிகள்; பரவி - வணங்கி; தந்தி - யானை; தந்திமாமுகன் - பிள்ளையார், தணிகை - திருத்தணி எனும் தலம்; குகன் - முருகன்; தவளம் - வெண்மை நிறம்)

## நாடகத் தரு

1. சவுபாக்கியவதி காந்த சதுர்வேத வேதாந்த
சருவேச காலாந்தகா செய செய!
செய செய கோதண்ட செயஞான மார்த்தாண்டா
செயவிமல காலகண்டா செய செய!

## திபதை

2. கங்கையும் பிறையுங் கடுக்கை ...
திங்கள் வேணியாளர் திருவருள் கொண்டு
வெளிமால் வரையை விடுத்தினி தகன்று
தெள்ளுசீர் புவியீர் செனனிக்க வேண்டி
... ... திருப்பெண்ணைக் கரையில்
முக்கிய மான முனைபாண்டி நாட்டில்
திசையெலாம் புகழும் திருநாவ லூரின்
இசைஞானி வயிற்றினில் இனிதுடன் பிறந்து
சைவனார் தந்தை சடையனார் மகிழ்ந்த
தேய்வான பிறைபோலத் தினந்தினம் வளர்ந்து
பதினாறு வயதுப் பாலக னாகிய
அதிரூப மாகி யாரூ ரென்னை
மணம்வந்த புத்தூர் மணக்கா வணத்தில்
இணைந்துபொற் பீடத் திருந்திடும் போதில்
அலகிலா வொளியார் அந்தண ராகி

மலரடி நோவ வந்துமுன் தோன்றி
என்னுட அடிமை யெனக்குநீ தோழன்
முன்னமே யென்னை முனிவோரும் பேசிச்
சாதக முறியும் தன்கையிற் கொண்டு
வாதுகள் பேசி மடிபிடித் திழுந்து
விந்தை யிதென்ன வெண்ணைநல் லூரில்
அந்தணர் சபையில் அடிச்சுவட் டோடி
வழக்குநாம் செயித்து வலியவாள் கொண்டு
தழைக்கவே புரிந்து சரித்திர முழுதுங்
கமலி னிந்திகை கன்னிமா ரென்னுஞ்
சுமர்விழிப் பரவை சங்கிலி தன்னை
செய்யவா ரூரில் திருவொற்றி யூரில்
வையகம் புகழும் மணம்புணர்ந் ததுவும்
அங்கவர் தமக்கால் அர்த்தராத் திரியில்
துங்கமுக் கண்ணனார் தூதுசென் றதுவும்
மத்துள தேவதையும் மலையாள வழியிற்
பத்தி வேடுவர்கள் பறித்தது முதலாய்
கவிதமிழ் புராணக் கதைச்சுத கரத்தை
செவியில் நிறைந்து திகட்டிய தென்ன
இகமெல்லாம் மகிழ யிதயங் களிக்க
சகசமாய் விழியிற் தான்பார்த்து வேண்டி
மறைபால் வள்ளல் வையூர்க் கரசன்
துரைபாலர் போற்றும் சத்திதன் புதல்வன்
அம்புவிப் புலிவோர்க் காதர வாகும்
தம்பூ பதிதான் சாத்தெனச் சொல்ல
வெண்ணிசேர் பதாகை விளங்குசீர் கருணன்
இனிய பூபன் இனியான் உதவும்
சுந்தர விலாசம் சுபல நாடகத்தைக்
கந்தவே ளருளின் கழறிய லதனால்
விசித்திர மாய றைந்துகொள் ளாமல்
சிவசரித் திரமாய்ச் செப்பிய வதனால்
பூஞ்சொல் லாயினும் புலவர்கள் ளானோர்
தீஞ்சொல்லால் மனதில் இசைந்துகொள் வீரே

(திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் என்ற ஊரில் இசைஞானி எனும் தாயிடத்துப் பிறந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தந்தை பெயர் சடையனார். சுந்தரமூர்த்திநாயனாருக்குப் பதினாறு வயதில் புத்தூர் என்ற ஊரில் மணம் நடக்க இருந்தது. மணப்பந்தலில் அமர்ந்த அவரை இழுத்து, "உனக்கும் எனக்கும் வழக்கு உள்ளது; இந்த ஓலை முறியின்படி நீ என் அடிமை" என்று மணத்தை தடுத்தார். சிவன். பிறகு,பரவை சங்கிலி எனும் இருவரை, இருவேறு நிலைகளில் மணந்து கொண்டார். பின்பு, பரவையார் சுந்தரரிடத்தில் ஊடலாக இருக்கவே, அதனைக் போக்கச் சிவனார் தூது சென்றார். சுந்தரருக்குச் சேரமான் தந்த பொருளை வழிப்பறி செய்தனர். சிலர். இப்படிப்பட்ட வரலாறுகளையெல்லாம் பாடுவதற்காக வையூர் எனும் ஊருக்கு அரசன் புலவரை வேண்டினான். பாடியதில் தவறுகள் இருப்பின் பொறுத்துக் கொள்க).

## வசனம்

சகலசீவ தயாபரமா யிருக்கப்பட்ட தம்பிரான் தோழராகிய சுந்தரர் விலாசத்தை யெம்மாலான மாத்திரம் தமிழினாலே நாடகம் பண்ணி நடிக்கின்றோம். நான் பண்ணின நாடகத்திலே தப்புண்டாகிலும் மெய்யாகக் கொண்டு சகலசினரும் பராக்கில்லாமல் பார்த்து அனுக்கிரகம் பண்ணுகோளையா!

(நாடகம் பார்ப்போரை பார்த்துக் கூறும் கூற்று தம்பிரான் தோழர் என்று சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஒரு பெயர் உண்டு. சினரும் - மக்களும்; பராக்கில்லாமல் - அங்கும்மிங்கும் பார்த்துக் கொண்டிருக்காமல்)

## விருத்தம்

3. பூப்பிள்ளை மதிமான் தன்னைப் புரிசடை மீதில் சூடிச்
சேப்பிள்ளை மடமான் தன்னைச் செங்கையில்
தரித்தார் தோழன்
கோப்பிள்ளை சைவ வேதக் குரிசில் சுந்தரன் கலியாண
மாப்பிள்ளைத் தோழன் விப்பிர வித்திரன் வருகின் றானே!

(நாடகத்தின் மாந்தனாகிய விப்பிரவித்திரன் இங்கு முதன் முதலாக அறிமுகம் செய்து வைக்கப்படுகிறான். விப்பிரவித்திரன் என்பான், சுந்தரமூர்த்தி நாயனாரின் மாப்பிள்ளைத் தோழனாகக் காட்டப்படுகிறான். விப்ரவக்கிரன் என்றும் பின்னர் குறிக்கப்படுவான்.)

## தரு

4. தடித்த காதுங் தொள்ளக் காதுஞ்
சடிச்ச முகமும் வெள்ளிக் கண்ணும்
அழகான விப்பிரவித்திரன் வந்தானய்யா!
வாடிக்கையாய் நீறுபூசி மார்பில்பூ ணூலும் போட்டு
வேடிக்கையாய் வந்த சுந்தரர்
விப்பிரவித்திரன் வந்தானய்யா!
தச்சகந்தல் குல்லா யிட்டு தாளிபில்லை பதக்கம் போட்டு
மெச்ச மெச்ச சொகுசான விப்பிரவக்கிரன் வந்தானய்யா!
சொந்தமாவோர் கையில் கோலும் சுந்தரனார் தோழனென
விந்தை யாய்ஒய் யாரமான விப்பிரவக்கிரன் வந்தானய்யா!

(தொள்ளைக்காது - ஓட்டைக்காது; தச்ச - ஒட்டுப்போட்டுத் தைத் த; விப்பிரவித்திரன் , விப்பிரவித்திரன் என்று கேலியாகக் குறிக்கப் படுவது நோக்கற்பாவது விதூஷகன் எனப்படும் கோமாளி இவன். எனவே அதற்கேற்ப இவனது உருவம், ஆடை ஆகியவை பொருத்தமாக உள்ளமையை மேற்பாட்டு தெரிவிக்கிறது.)

## வசனம்

வாரும் பிள்ளாய் பிராமணா! நீ எங்கே இருந்து வருகிறாய்? சொல்லும் பிள்ளாய்! ஆனால் சொல்லுகிறேன் கேளுங் கேளய்யா! திருநாவலூரிலிருந்து சுந்தரர் மணத்திற்கு வருகிற நான் மாப்பிள்ளைத் தோழன்! இந்த வார்த்தை முன்னே சொல்ல வந்தேனய்யா!

(திருநாவலூரென்பது சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த ஊர். எனவே, விப்பிரவித்திரனும் அதே ஊர்க்காரனாகக் காட்டப்படுகிறான்).

## விருத்தம்

5. காழ்கொண்ட கண்டன் முந்தி
   கனிவினால் வலிய வந்ததென்
   ஆள்கொண்டே ஆள வல்ல ஆண்டவ னாகி நின்று
   தூதனாய்த் தோழ னாகி சொலுந்தமிழ் பாடற் கெல்லாம்
   மாதன மளிக்க வல்ல வன்பின னாகி நிற்கும்

6. மாதவம் புரிந்து முன்மன வன்தொண்ட என்னும் நாமம்
   பூதல மாறிய முக்கட் புங்கன் சொல்லா ரூரன்

7. படங்கவி பணிபூ ணாரம் பரமநற் றூளி யினால்
   தடங்கலி னசவன் பெற்ற தையலை மணந்து கொள்ளத்
   தந்திடு உளமும் கொண்டு தமையன்தான் வளர்ந்து வீறு
   மதிர்ந்திடா அரசுங் கொண்ட நரசிங்க முனையர் தந்த

8. செல்வமும் கொண்டு ரத்ன செம்பொன்ஆ பரணம் பூண்டு
   வல்லமை யாகி நல்ல மணப்பிள்ளை கோல மாகி
   தனம்பெறு சுற்றஞ் சூழத் தாண்டுபொற் பரியி லேறி
   வளம்பெறு புத்தூ ருக்கு மகிழ்வுடன் வருகின் றாரே!

(ஆறாம் பாடலில் ஈரடிகள் ஓலையில் பழுதடைந்தன. குதிரைமீது ஏறிக்கொண்டு, ஆபரணங்களுடன், திருமணம் செய்து கொள்வதற்காக மாப்பிள்ளையாகிய சுந்தரமூர்த்தி நாயனார், புத்தூர் வரும் செய்தி மேலே உரைக்கப்பட்டது.)

## தரு

9. தவளமுத்துக் குல்லா யிட்டு தாளிபில்லை பதக்கம் பூண்டு
   சவளமுன்னூல் சைவ வேதர் துரங்கமேல் வந்தனர் பாரீர்!
   பொன்னாடை தன்னைப் போர்த்துப்
   பூஷணமெல் லாமணிந்து
   மன்னமன்னர் புகழ் சைவர் வலிமையாய் வந்தனர் பாரீர்!
   இருபுறமும் கவரி வீச எழுகடல்போல் மேளம் பொங்க
   சுருபமத ராச னென்ன சொகுசுடன் வந்தனர் பாரீர்!

சடங்கவி யாற்முத லாவுள்ள சம்பந்திமா ரெதிரே கொள்ள
துடங்கிய ஆருர னென்னுஞ் சுந்தரர் வந்தனர் பாரீர்!

(திருமணத்துக்கு வரும் சுந்தரமூர்த்தி நாயனாரின் தோற்றப் பொலிவு முதலியன இங்கு காட்டப்படுகிறது. குதிரைமீது அமர்ந்தபடி சுந்தரர் வந்தாராம்! அவர் முத்துப் பதித்த குல்லாய் அணிந்திருந்தாராம்! பதக்கமும் பூண்டிருந்தாராம்! சடங்கவி என்பது சுந்தரமூர்த்தி நாயனாரின் மாமனார் பெயர். சடங்கவி என்பாரும் அந்தணரே. இருபுறமும் கவரி வீச,மேளதாளங்களுடன் சுந்தர மூர்த்தி நாயனார் திருமணத்துக்கு வருவது வெகு களிப்புடன் மேலே பாடப்படுகிறது.)

## வசனம்

“வாழும் பிள்ளாய் விப்பிரவக்கிரா! சடங்கவியார் வீட்டுக்குப் போய் பந்தல் பரப்பு பல்லக்குஞ் சில முஸ்தீப்பும் ஆச்சுதோ வென்று பார்த்து வாரும்!

என்ன அப்படியே விசாரிப்பேன், பந்தலுஞ் சில முஸ்தீப்பு மாச்சுது! சீக்கிரமாய்க் கோலம் வரவேணுமையா! (3)

(சுந்தரமூர்த்தி நாயனார் மாப்பிள்ளைக் கோலத்துடன் வரவே, அவரை வரவேற்க மாமனார் வீட்டில் ஏதாவது ஏற்பாடுகள் உள்ளதா என்று இங்கு கேட்கப்படுகிறது. முஸ்தீப்பு ஏற்பாடு. பந்தல் போட்டுத் திருமணம் செய்வது சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தும் இருந்தது என்பது இவண் குறிக்கத்தக்கதே.)

## தாடிப்பதம்

10. கோலம் பாரீர்! சுந்தரர் கோலம் பாரீர்!
சிங்கார மாகிய குமர வேலன்
தனுவேளென் சாலவே அழகோ?
முடுகுவம் பரிதன்னிலே ஒருவீதி வருகிற (கோலம்)

வந்தி மாகதம் புகழும் சங்கீதங்கள் தொனியாக
இங்கித மந்தமாருதம் வீச நாட்டியமதாய்ச் சூழ்ந்திட
வீதி வருகிற (கோலம்)

பேரி காளத் தூரிய வானிடி போல முழங்கிடச்
சாரி யாகிய சனமசர மேளமதாய்த் தெருவீதி வருகிற
(கோலம்)

மன்னர் போற்றிய நாவலூர் வரும்
வள்ளல் கொற்றத்தார் வந்தா ரெனச்
சின்ன மூதிடச் சைவ வேதியர்
திரண்டு சூழ்ந்திட வீதிவருகிற (கோலம்)

(இது பதம் என்னும் இசைப்பாட்டு. சுந்தரமூர்த்தி நாயனாரின் வருகையே இங்கும் பேசப்படுகிறது. முருகன், மன்மதன் இருவரும் சுந்தரமூர்த்தி நாயனாரைவிட அழகோ? என்று கேட்கப்படுகிறது வந்தி, மாகதம் ஆகிய தேசங்கள் புகழக்கூடிய சங்கீதங்கள் முழங்கச் சுந்தரமூர்த்தி நாயனார் வருகை தருகிறாராம்! சனங்கள் அமர்ந்து விடுகிறார்களாம்! நாவலூர் வள்ளல் வருகைக்காகச் சின்னம் எனும் வாத்தியமும் ஊதப்படுகிறததாம்! சைவ வேதியர்களெல்லாம் சுந்தரமூர்த்தி நாயனாரோடு உடன் வருகிறார்களாம்!)

## விருத்தம்

11. கோலம்வந் தினிய யோகக் குதிரை மாதர்
கால மங்களங்கள் பாடி தனித்தனித் தீப மேந்தி
சீல மாமனார் தன்னில் திருமுத்தம் புகுந்தா ராராம்
மாலிவ னென்ன பொன்னின் மனைமிசை வருகின் றாரே!

(சுந்தரமூர்த்தி நாயனார் தன் மாமனார் வீட்டில்வந்திறங்கி, முற்றம் புகுந்ததும், 'யாராம் இவர்?' என்று அதிசயத்தார்களாம். பெண் களெல்லாம் மங்களங்கள் பாடினார்களாம்!)

## வசனம்

"அந்தச் சமயத்திலே, புரோகிதர் வருகிற விதம் எப்படியென்றால்".

## விருத்தம்

12. வன்னிய சதிரங்கத்தாய் நோக்குபவர் சாங்கத் தோடு
வாசிக்க வல்ல சுருதியா றங்கஞ் சொல்லி
மன்னிய சாத்தாங் கதை வழங்கவே வாங்க வல்லோன்
பன்னுவீர் புரோதி தன்பூப் பந்தலில் வருகின் றானே!

புரோகிதன், பூக்கள் அலங்கரிக்கப்பட்ட மணப்பந்தலுக்கு வருகிறான்! நான்கு (சதிர்) அங்கம், பஞ்சாங்கம் (ஐந்து), ஆறங்கம் என்று எண்களில் அணிசேர்க்கிறது இவ் விருத்தம்!

## தரு

13. வந்தனர் வந்தனரே! - புரோகிதர் வந்தனர் வந்தனரே!
வந்தனர் கந்த மணிந்தனர் சிந்தை யுகந்தனர்
அட்சதை தந்தன ரிங்கே! (வந்தனர்)

சால வேத ஞானசிலநன் னூலினரே
குந்திய காலினர் கையொடு கோலினர்
பிரமனைப் போலினர் இங்கே வந்தனர்! (வந்தனர்)

(புரோகிதர் வருகை, தரு எனும் இசைப்பாட்டில் பாடப்படுகிறது. கந்தம் - சந்தனம் முதலியநறுமணப் பொருட்கள். கோலினர் என்பதற்கு இயைபாகப் போலினர் என்று ஆண்டது. நயமிக்க சொல்லாட்சி!)

## விருத்தம்

14. அட்ட ஐசுவரிய மஸ்து ஆயிரர் ஆரோக்கி மஸ்து
இட்ட காமியார்த்தம் மஸ்து ஈசுரர் கடாக்ஷம் மஸ்து
துட்ட நிக்கிரகம் மஸ்து சுபமஸ்து அவிக்கின மஸ்து
சிட்ட காமியார்த்த மஸ்து சிந்திதா பலித மஸ்து

(அஸ்து - உண்டாகட்டும்; வடசொல். சுபமஸ்து - சுபம் உண்டாகட்டும். துட்டநிக்கிரகம் - துட்டர்களை அழித்தல்; அவிக்கினம் - இடர் வராமல் இருக்க, இட்ட காமியார்த்தம் - விரும்பும் பொருள்; சிந்திதாபலிதம் - ஆசைப்படுவது நடக்கும்.)

## வசனம்

"அகோ புரோகிதரே நமஸ்காரம்! நமஸ்காரமய்யா!"

## விருத்தம்

15. கெந்தம் அட்சதையும் நாளி கேரமும் பழமுங் கொண்டு
தந்திடு மரிசி புஞ்பந் தாம்பூலங் கொண்டு வாரும்
செந்தழல் வளர்த்த நெய்யும் தெட்சிணை பணமுந் தாரும்
அந்தநீர்க் கரகம் வைத்தே அருச்சனை செய்கு வீரே!

(நாளிகேரம் - தேங்காய், கரகம் - கும்பம் வளர்த்த - வளர்க்க; செந்தழல் - செந்தீ;ஓமத்தீ தேங்காய், பழம், பூ, நெய், தட்சிணை ஆகியவற்றைக் கொண்டு வருமாறு புரோகிதர் கேட்கிறார்.)

## முகூர்த்தம் நெருங்கிவிட்டது!

16. பாலிகையில் முளைத்தெழுந்து பரதேசம் போய்வந்து
காலவே அரசாணி பிரதட் சிணமும்வந்து
செந்தழலை வளர்த்தோம் செய்து நிறமாய்வேத
மந்திரமொடு பொற்காப்பு மலர்கையிற் றரித்து
சீலமொடுஞ் சடங்கனைத்துஞ் செய்துநேர மாச்சுதினி
தாலிகட்டவே முகூர்த்தம் சமய மிதுதானே!

(பாலிகை - முளைப்பாலிகை, நவதானியங்களை முளைக்க வைப்பது, அரசாணி - அரசாணிக்கால். தாலிகட்டும் நேரம் இது என்று புரோகிதர் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.)

## வசனம்

"இப்படியாகச் சடங்குகளெல்லாம் முடித்து, முகூர்த்தம் வேளையாச்சுதென்று புரோகிதன் சொல்லுகிற சமயத்திலே பரமேஸ்வரன் பிராமண ரூபமாய் வந்து தடுத்தாட் கொள்ளுகிற விதம் எப்படியென்றால்" (6)

(சுந்தரமூர்த்தி நாயனார் மணவறையில் உள்ளார், 'புரோகிதர் நேரமாச்சுது'என்று குரல் கொடுக்கிறார்; அப்போது வந்து தடுக்கிறாராம் சிவன் திருமணத்தை!)

## சிவபிரான் வருகை

17. தெள்ளுசீர் முனிவர் தேவர்
வெள்ளியங் கயிலை வெற்பில் விடுத்து
சந்திர சேகரனார் தம்முட அடிமை
சுந்தரர் தமையோர் தொல்முறைப் படியே
அடையவே வலுவாய்க் கொள்ளப் புவியில்
சடைய தெனவே தாலமெழுந் தருளி
செய்யபா தங்களைத் தீபங் காட்டி
வைய்யமேல் பிடிக்கும் வகையது போல
வந்துமா னிடர்போல வடிவது கொள்ள
சிந்தையைப் புரிந்து திருவருள் தழைத்து
கங்கையிற் பணியும் கடுக்கை கொக்கிறகும்
திங்கள்வான் பிறையும் செஞ்சுட ரடவியும்
மெங்ஙனே துடிப்பாய் யிருந்துதோ தலையில்
பங்கமாய் நரைத்துப் பதித்தபூஞ் சிகையும்
ஒத்தைநேத் திரத்தை ஒளிக்கினும் தன்னுள்ள
மற்றநீள் நெருப்பை மறைத்ததோ வகையோ
தெரிகிலா னுதலிற் திருநீ றணிந்து
அர்த்தாகிய கந்த மாக்ஷதை புனைந்து
கந்தர மதனிற் கருப்பினை மறைத்து
சந்தன சுகந்தஞ் தன்னையே தரித்ததும்
மன்னுபூங் கொன்னை மாலைமார் பகத்து
முன்னமே விளங்கு முப்புரி நூலும்
பச்சைமா நிறமும் பாதியிற் சிகப்பும்
இச்சையாய் விருத்தே ஏகமோர் நிறமாய்
மருவுமான் மழுவு மறைத்ததை மறைத்து
ஏமகையிற் குடையும் ஒருகையிற் கோலு

மாகிய கறித்தோ லாடையை யொளித்து
யேகநூல் கலையை யியல்பினா லுடுத்து
குஞ்சித பதமுங் கூத்தாடுந் தாளும்
செஞ்ச வேஷமதாய்த் திக்கென நடந்து
கருணைவந் தொழுகும் கதிர்மதி விழிகள்
அருணைதா மரைபோல் அலர்ந்தழ கொழுக
தேவியு மறையுஞ் செய்துதான் தனித்து
மேவிய முதிய விப்பிரர் வந்தனரே!

(தோலாடை தவிர்த்துவிட்டு, நூலாடையை கட்டிக் கொண்டு, ஒரு கையில் குடை.யையும் மறு கையில் ஒரு கோலையும் கொண்டு, முதியவர் வேடத்தில் சுந்தரரை ஆட்கொள்ள வந்த பாங்குமேலே வருணிக்கப்பட்டுள்ளது.)

## தரு

கிழவிப்பிரனார் வந்தாரே!

18. கிழவிப் பிரனா ரிதோவந் தனர்காண்!
கிழவிப் பிரனா ரிதோவந் தனர்காண்!
கிழவிப் பிரனார் மதிசூழவிப் பிரமானமாய்
கந்தா க்ஷதையிட்ட நீறு நெற்றிதோண! (கிழ)

பேறலாத வேயரவர் பரிபுரத் தாளினர் பரதநாட்
டியம்விட்டு
பாரினில் மெல்ல மெல்ல பதியவே நடந்து! (கிழ)

வெண்ணீறு பூசிய தென்னவே! தலைமே லெங்கும்
நரைமயிர் மின்னவே!
கண்ணான மூன்றினில் அதியாய்ச்சொரி
கண்ணை! - கரந்திரு
கண்ணீர் கருணையே சொரிய! (கிழ)

குஞ்சரத் தோலுரி போலவே - கரைக்
கோவணஞ் சோமனுஞ் சாலவே
தலையினை விட்டெறிந் தாரென - கையினிற்
கோலும் குடையுமே கொண்டு! (கிழ)

(கிழவர் வேடத்தில் சிவனார் வந்ததையே மேலைத் தருவும் புகழ்கிறது.

மூன்றாவது கண்ணாகிய நெற்றிக் கண்ணை மறைத்துவிட்டு, மற்ற இரு கண்களிலும் கருணையானது சொரிய அக்கிழவர் வந்தாராம்! அவர் நாட்டியம் ஆடுதலை நிறுத்திவிட்டு, மெல்ல மெல்லத் திருமணம் நடக்கும் புத்தூருக்கு வந்தாராம்!

விப்பிரன் - பிராமணன்.)

## சிவனார் விசாரித்தல்!

## விருத்தம்

19. இந்தவூர் புத்து ராமோ யெமக்கொரு தொண்ட னாரும்
சுந்தரர் மணஞ்செய் வீடு தூரமோ கிட்ட மேயோ?
அந்தமே ளத்தி னோசை அவன்கலி யாணந் தானோ?
நந்தமக் கறிய நீங்கள் நவிலு நவிலு வீரே!

(கிழவேடத்தில் வந்த சிவன், 'இந்த ஊருதான் புத்தூரா? சுந்தரர்னு ஒருத்தர் திருமணம் செய்யப்போகிறாராமே, அவரு வீடு கிட்டவா தூரத்திலா? அதோ மேளச்சத்தம் கேட்கிறதே அது அவர் கலி யாணத்திற்குத்தானா? எனக்குச் சொல்லுங்கள்! என்று மக்களை விசாரிக்கிறார்!)

## வசனம்

"வாருமையா விருத்தரே!சுந்தரர் மணஞ்செய்கிற வீடுயிதுதான்!" என்று சொல்ல, அப்போ, பந்தலிலே யிருக்கிற பெரியோர்கள் எதிரே வந்து சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (7)

(விருத்தர் - முதியவர்; இங்கே சிவன்)

## புத்தூர்ப் பெரியவர்கள், கிழவேடச் சிவனை வரவேற்றல்!

### விருத்தம்

20. நாதரே பெரியோர் வந்தீர் நமஸ்கார மய்யா நாங்கள்
மாதவஞ் செய்த தெல்லாம் வந்தின்று பலித மாச்சு
மேதக திருவா ரூரான் விவாகமுஞ் சுலப மாச்சு
தேதய்யா நீர்நிற் கின்றீர்? இருமையா வருமை யாவே!

(நாங்கள் பட்ட பாட்டுக்கெல்லாம் இன்று பலன் கிடைத்தது; ஆருரன் விவாகத்திற்கு வந்துள்ள நீங்கள் உட்காருங்கள் என்று வரவேற்கிறார்கள் புத்தூர் நகரப் பெரியவர்கள்.)

### வசனம்

"அந்தச் சமயத்திலே விருத்தப் பிராமணர் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால்" (8)

### 'அடிமை முறி உள்ளது!' எனல்
### தரு
### திரிபுடை

21. சைவ வேதியரே நீங்கள்
சுந்தரனது மருமானவ ரிங்ஙனே செய்வதேது?
கலியாண நாமினி செப்பக் கேளும்!

22. தந்தை தந்தை யாரூ ரானே - முதல்
தரந்த ரத்தினில் பிறந்த பிள்ளைகள்
முந்தவே யெமக்கடுமை யாகிய முறியைக் கண்டீர்!
அந்த நாளிலேயே முதுசாதன மனைத்துமென்
வசமா யிருக்கவே
இந்தவோர் பையன் பாருன்
மணத்தைக் கொண்டிருக்க லானான்!

(ஆரூரானாகிய சுந்தரமூர்த்தி நாயனார் சிவனுக்கு அடிமை என்ற செய்தி கூறப்படுகிறது. அதற்கான ஓலை ஆதாரம் தன்னிடம்இருப்ப தாக திருமணத்தைத் தடுக்க வந்த கிழவர் இங்கு கூறுகிறார். சுந்தரமூர்த்தி நாயனாரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த ஓலையாம் அது!.)

## 'ஆரூரா எழுந்திருடா' என்று கூப்பிடல்!

### தரு

### சம்பை

23. சிவனாவ தேது மனையேறுவ தேது?
அவமாகி யென்னை யறியாமல் வந்தேது?
வாழைமரங் கமுகு மரம் வாசல்நட்ட தேது?
ஆழியென்மேல் மேளவகை யார்பிறப்ப தேது?
பந்தலினில் முளைதெளித்த பாலிகைகள் யேது?
சந்தடிக ளேதோமத் தழல்வளர்ப்ப தேது?
கால்கரக மேது அரசாணி அம்மி யேது?
மேல்வருவ தறியாத விப்பிரரெல் லாமேது?
சடங்கவியார் பெத்தபெண்ணைத் தருவதுதா னேது?
அடங்கலுமே யிவரடிமை ஆருமறி யாரோ!
ஆருரா எழுந்திருடா அமையுமினி வாடா!
நேராகச் சற்றுமினி நில்லாமல் தானே!

(" இதெல்லாம் என்ன? இங்கே எப்படி இத்திருமணம் நடக்கலாம்? ஆருரர் எனக்கு அடிமையாக இருக்கும் போது, என்னை அறியாமல் மணம் நடக்கலாமோ? சடங்கவியார் எப்படி தனது பெண்ணைத் தரலாம்? டேய் ஆருரா, எழுந்திருடா! " என்று கிழவர் வேடத்தில் வந்த சிவன் அங்குள்ளோரைப் பார்த்துக் கூறுகிறார்.)

### வசனம்

"இப்படியாக விருத்தர் சொல்லப்பட்ட வசனத்தைக் கேட்டு சுந் தரர் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (9)

## 'கனவு கண்டீரோ?' என்று சுந்தரர் கேட்டல்!
## சம்பைத் தரு

24. அய்யனே! மெத்த மெத்த ஆகாத்தியமாக
பையமேல் வழங்காத வசனமென் சொன்னாய்?
நித்திரையிற் கனவுகண்டு நினைவுகொண்டு வந்ததோ?
பித்தனோ பொல்லாத பேய் பிடித்ததுவோ?
விகடமாய்ப் பேசும்விப் பிரவேசமாய் வந்ததோ?
அகடுபல பேசும்கூத் தாடியோ சொல்லாய்?
அல்லவெனி லந்தணர்க ளாருமொரு வருக்கொருவர்
நல்லபடி அடிமைகொள்ள நாட்டிலே யுண்டோ?
ஆனாலு மென்பாட்ட னாரூரன் தானுமக்கு
மேனாளி வெதுக்காய் விலைப்பட்டான் சொல்லாய்?
விலைப்படினு மிதுவரைக்கு மேவியென்னைத் தொடராமல்
தலைப்பட்ட நீசும்ம்மா தானிருந்த தென்னமோ?
என்னநீ சொல்லுகினு மெவருக்குஞ் சம்மதமோ
கன்னக்காரத் தினமுமுந்தன் களவுமிங்கே செல்லுமோ?
செல்லாது விட்டோடுஞ் சிலதுபண்ணி னாலும் இம்மை
பொல்லாத நானினி பொறுப்பதில்லை கண்டாய்
இந்நேரங் கிழவ னென்னவே தெரிந்துகொண்டு
உன்னுரைத் தேடி ஓடிடுவாய் நீயே!

(சுந்தரமூர்த்தி நாயனார் இங்கே கிழவர் வேடத்தில் வந்த சிவனாரை மடக்குகின்றார்! 'நான் உனக்கு அடிமையா? என் பாட்டனார்ஓலை எழுதித் தந்தாரா? பிராமணர் இன்னொரு பிராமணருக்கு அடிமை கொள்வது உண்டா? அப்படியே நான் அடிமை என்று வைத்துக் கொண்டாலும், ஏன் இவ்வளவு நாள் சும்மா இருந்தீர்? உமக்கு என்ன பித்துப் பிடித்துவிட்டதா? கனவு கண்டீரா? நீர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இனியும் என்னால் பொறுத்துக்கொள்ள இயலாது! உன்னுடைய ஊரைப் பா ர்த்து ஓடும்! என்று கிழவரை மடக்குகின்றார் சுந்தரர்.)

## சிவனும் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஏசிக்கொள்ளுதல்!

### ஏசல்தரு

(சிவன் :)

25. நீ யென்னடா சுந்தரா! - உந்தன்
பாட்டன் இசவெழு திருக்கையிலே!
இந்தக் காய்ப்பேச் சென்னமோ?
கையிற் புண்ணுக்கு கண்ணாடி வேணுமோடா?

சுந்தரமூர்த்தி நாயனார் :
வேண்டின தெல்லாஞ் சொல்லுறாய்! - உந்தன்
வார்த்தை மெய்படுமோ கிழவா?

சிவன் :
சில்லித் தொண்டிக்குள் ளாயிரஞ் சாலோடு
தண்ணி சொரிந்தாலும் நிற்குமோமா?
நில்லாத மொழியல்லடா - சொல்வதெல்லாம்
நிசவார்த்தை காண் சுந்தரா.

சுந்தரமூர்த்தி நாயனார் :
என்றுங் கல்லாத மூடனைப் போலவே
கோணக்கழி வெட்டுறா யென்னமா?
என்னடா நீ கிழவா அடிக்கடி
எனக்குநீ அடிமை யென்றே - எந்தன்
முன்னிலே சொல்லுறாய் சொன்ன வாய்க்கினி
முத்திரை போடுவேண்டா!

சிவன் :
முத்திரை போடுவையோ சுந்தரா? - இந்த
மொழி பதனம் பண்றடா!
இந்தப் பந்த மேதுலகில்? வளர்த்தகடா
வந்து பாயலாச்சுதடா!

சுந்தரமூர்த்தி நாயனார் :

அல்லடா போகிழவா! இதினாலே ஆவதுண்டோ?
சொல்லடா இனி நில்லடா வெளியே!
பிடித்துக் காளியாட்டம் நீசெய்ய வந்தாயோமா?

சிவன் :

வந்தது மெய்யடா! அல்லவென்று
வந்தாக்கால் விடுவேனாடா? - இனி
சுந்தரா பேச்சினால்
பந்தவிட வேண்டாம்!
சும்மாயென் பிறகே வாடா!

சுந்தரமூர்த்தி நாயனார் :

வாடா போடா யென்குறாய்! - இந்த
வார்த்தை மன்னித்தேன் காண்கிழவா!
இனிக் கூடாது கொக்குப்பிடிக்கிற மந்திரம்!
கூறினாலே தரமோடா?

(சிவனும் சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்ளும் ஏசல் பகுதி இது. தமிழில் உள்ள பள்ளு இலக்கியங்களில் இப்பகுதி மிகச் சுவையாக வரும். முக்கூடற்பள்ளு போன்ற கலைமிகு பள்ளு இலக்கியங்கள் தமிழில் அச்சாகியுள்ளன.

கடவுளாகிய சிவன், 'வாடா, போடா' என்று மனிதனுக்குச் சமமா கப் பேசப்படும் இந் நாடகக் காட்சி பார்ப்போரை மகிழ்விக்கும் இப்பகுதியில் சில பழமொழிகள் வந்துள்ளன. 'கைப்பூணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? 'என்று இருக்க வேண்டிய பழமொழி. திரிந்து 'கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? ' என்று தற்போது வழங்குகிறது. இவ்வாறு பிழையாக வழங்கும் நூற்றுக் மேற்பட்ட பழமொழிகளுக்குச் செம்மை வடிவம் ஆராயப்பட்டுள்ளது! (தமிழில் பழமொழி இலக்கியம், டாக்டர் எஸ்.சௌந்திரபாண்டியன், 72 பெரிய தொரு திருவல்லிக்கேணி, சென்னை 5) 'கோணக்கழி வெட்டுறாய், என்பதும் ஒரு பழமொழி'; கூடாது கொக்குப் பிடிக்கிற மந்திரம் 'என்பதும் ஒரு பழமொழி.

சில்லித்தொண்டி - சிறுதுளை. சிறு துளைக்குள் ஆயிரம் கால் தண்ணீர், விட்டாலும் அவ்வளவும் அதில் தங்குமோ? அதுபோல, நீ என்னதான் சொன்னாலும், நில்லாது; நான் ஆதாரத்தோடு பேசுவதுதான் நிற்கும் என்றார் சிவனார்.)

## ‘என் பின்னால்வா’ எனச் சிவன் கூறல்
## விருத்தம்

26. மந்திர மல்ல வஞ்ச மாயம தல்ல வேரே
தந்திர மல்ல வந்த சாதனம் பார்த்துக் கொண்டால்
புந்தியில் லிகித சாக்ஷி புத்தியும் பார்த்துக் கோடா
சுந்தரா மணத்தை விட்டு தொடர்ந்துநீ வருகு வாயே!

(‘நான் மந்திரம் எதுவும் செய்யவில்லை! மாயமும் செய்யவில்லை! தந்திரம் செய்ய இங்கே வரவில்லை! உன்புத்தியால் பார்த்துக் கொள்! என்னிடம் இலிகித சாட்சி உள்ளது! ஆகவே, திருமணம் செய்வதை விட்டுவிட்டு என்பின்னால் வந்துவிடு! என்று சிவன் கேட்பதாக உள்ளது மேற்பாட்டு.

லிகித சாக்ஷி - எழுத்துக் கொண்டது.)

## வருகுவாய் என்று சொன்ன வசனம்

“மன்னித்தேன் கண்டாய், பெரியதோர் கிழவா! பித்துப் பிடித்துக் கொண்டுதானிங்கே அருகில் நின்றாயானால் அப்புற மென்னமோ? ஒரு கணமினி நில்லாமமோடா நீ ஓடுவாயே!” (10)

(சுந்தரமூர்த்தி நாயனார், அக்கிழவரை மன்னித்து, ‘இனி நீ இங்கிருந்து ஓடிடு என்று கூறும் பகுதி இது.)

## வசனம்

“ அந்தச் சமயத்திலே கிழ விப்பிரனார் மனதிலே வஞ்சமில்லாமல் முகத்திலே கோபாவேசம் வர, குடுமியை உதறி முடித்துக் கொண்டு, கண்கள் சிவக்க, வாய் நீர் தெறிக்க, உடம்பெல்லாம்துடிதுடிக்க, கை கால் நடுங்க, புரோகிதன் மேல் விழுந்து ஓமாக்கினியை மெரிச்சுக்கொண்டு ஒரு கையினாலே சுந்தரரை மடியைப் பிடித்திழுக்கிறபோது, சுந்தரருங் கோபாவேசத்தாலும்,ஒரு கையினாலே சாதன முறியைப் பிடுங்கி கிழித்துப் போடுகிறபோது கிழ விப்பிரனார் மடி பிடித்த கை விடாமல் கூச்சலிடுகிற வித மெப்படியென்றால்”

## தரு

27. அய்யகோ வெந்தன் அருமைப் பயல்தானே
அடித்தென்னைத் தள்ளிநான் கூகூ இந்த
வையத்தில் கேள்விமுறை கேட்டு
தெண்டிக்க மன்னரில்லையோ கூகூ

பிடித்திழுத்தான் முறியைப் பிடுங்கிக்
கிழித்தான் அடித்தான்காண் கூகூ
அடித்தாலு மாகட்டும் முறியைக்
கிழித்ததே அநியாயம் கூகூ

பித்தனு மென்றென்னைப் பேசாதும் பேசினான்
பின்னைடி மப்படி செய்தான் கூகூ - இனி
எத்தனை யானாலு மிவனுடன் போராட
எந்தர மாடுமோ கூகூ

அதிர வடித்திட்டேன் முறியைக் கிழித்திட்டான்
காட்டு மாகட்டுங் கூகூ
அதுஎதிர் நடைபோனா லெனக்கென்ன
முதல்முறி யிருக்குது காணின்னங் கூகூ

பித்தனோ னாலுமினி தானிழுத்து மடியைப்
பிடித்தகை விடுவேனா கூகூ இனி
இத்தல மீதினி லெவந்தான் வரட்டும்
இவனை விடுவேனாகூகூ!

(கிழஉருவில் இருந்த சிவன் கூற்றே மேல் இசைப் பாடல். அழுது கெ ாண்டே பாடுவது போல இசைக்கப்பட்டுள்ளது.; கூகூ என்பது அழும் ஓசையாகும். சுந்தரமூர்த்தி நாயனார், சிவன் ஆதாரமாகக் காட்டிய ஓலைத் துண்டைக் கிழித்துப் போட்டதற்கு, இது போனால் என்ன, இது நகல் தான்! இதனுடைய மூலச் சுவடி என்னிடத்தில் இருக்கிறது என்கிறார் சிவன்!)

## வசனம்

"அந்தச் சமயத்திலே அங்கே இருக்கிற பேரெல்லாரும் கூடி வந்து இவர்கள் சண்டையை விலக்கித் திருவெண்ணெய் நல்லூருக்கு வழக்குக்குப் போக அனுப்புகிற வித மெப்படி யென்றால்"

## ஓடத்தரு

28. ஏது நீங்கள் பெரியவர்க ளிப்படியும் செய்வார்களோ?
போதுமினி முறிவுகொண்டு போர்புரிதல்! விடுங்கோளய்யா!
அடிமையென்ன இவர் வந்தார் அல்லவென்று
நீங்கள் சொன்னீர்
நடுவிலையோ இதையறிந்து நடுவில்நீதிப் பாரில்லையே?

வார்த்தைசொல் லாயிருக்க மறித்தறிய மனமிருக்க
துர்த்தகுண மாகியிந்த துஷ்டதனங் செய்வார்களோ?
இடையிலொரு மனிதன்வந்து இல்லாத பொய்கள்பேசி
உடைதுகிலை தன்னுதென்றால் உத்தரிக்க வேண்டாமோ?

ஆகயினா லடிச்சுப்பட லறமில்லவே
வாது செய்து பேசுவதும் வழக்கல்லா!
பொருதுவது வழக்கல்லா இனிநாங்கள் சொன்னபடி
இருவருங் கேளுங்கோள்! மனுநீதிப் படியிதனை

வழக்குரைக்க வல்லவர்கேள் வெண்ணை
நல்லூர் அந்தணர்கள்
வேதசாஸ்திர சம்பன்னர்கள் நிண்ணயமாய் தீத்திடுவார்
நீங்களங்கே போகுவீரே!

(சுந்தரமூர்த்தி நாயனாரும், சிவனும் மணப்பந்தலில் ஒருவர்க்கொருவர் ஏசிப்பேசிச் சண்டை இடவே, அங்கே அமர்ந்திருந்த பெரியவர்கள், என்ன இது? இப்படியெல்லாம்நடத்து கொள்ளலாமோ? ஒருவரையொருவர் அடிக்கலாமோ? நாங்கள் செய்வது போலச் செய்யுங்கள்! திருவெண்ணைய்நல்லூரில் நீதி சொல்லும் பிராமணர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் சென்று உங்கள் வழக்கைக் கூறுங்கள்! என்று சமாதானம் செய்தார்கள்.

உத்தரித்தல் - நிரூபித்தல், நீதிப்பார் - நீதிபுகல்வார்.)

### வசனம்

"அந்தப்படிக்கி யிருவருஞ் சம்மதியுடனே திருவெண்ணெய் நல்லூர் ஊர் போறவிதமெப்படி யென்றால்," (12)

## சிவனும்சுந்தரமூர்த்தி நாயனாரும்வெண்ணெய்நல்லூர் ஏகுதல்

### விருத்தம்

29. சுந்தரர் நடந்து முன்னே சுரீலெனப் போகப் பின்னே
வந்ததோர் கிழவ னாரும் வளைந்து கொண்டே யோட
சைவரந் தணர்ப லரும் செல்வதிக வேகத் தோடே
நந்திடா வெண்ணெய் நல்லூர் நகரத்தினி லேகி னாரே!

(புத்தூர் வாழ் மக்கள் கோரிக்கைக்கு ஏற்ப,சுந்தரரும்,முதியவரும் திருவெண்ணெய்நல்லூர் புறப்பட்டனர். சுந்தரமூர்த்தி நாயனார் முன்னேயும் சிவனார் பின்னேயும் நடந்து சென்றனராம்! அவ்விருவரோடு சைவ அந்தணர் பலரும்கூடவே சென்றார்களாம்! ஏகுதல் - செல்லுதல்)

### வசனம்

"அந்த வேளையிலே யிவர்கள் வழக்குக்கு வந்த விசேஷம் கேட்டு திருவெண்ணெய் நல்லூர் வித்துவ மகாசனங்கள் பேர் பேராய் வருகிற விதமெப்படியென்றால்" (13)

## திருவெண்ணெய் நல்லூரில் நியாயம் கூறிய அந்தணர்கள்

### திபதை

30. அப்பய்ய அனந்தய்ய ரானந்த தீக்ஷிதர்
குப்பய்யர் குருநாதர் குமரய்யர் சாஸ்திரி
கந்தர்வர் கீர்வாணர் கிருஷ்ணாவ தானி
சந்திரசேகர சைவ சாம வேதப் பய்யர்
திரிவேதி விசுவேச செகன்னாத சாஸ்திரி

அறிவா கரப்பிரம்ம னோர்க ளிவர்கள்
கமலமா வதனமுங் காஷாய வேஷ்டியும்
விமலமாய் முந்நூலும் மேனிப்ர காசமும்
மகரகுண்டல மின்ன மணியாழி யொளிர
சகலரு மகிழ்வுடன் சபைக்குவந் தனரே!

(அப்பய்யர், அனந்தய்யர், ஆனந்த தீட்சிதர், குப்பய்யர், குமரப்பய்யர், செகன்னாத சாஸ்திரி என்றாங்கு அந்தணர் பலர் திருவெண்ணெய் நல்லூரில் கூடினார்களாம் ஆழி - மோதிரம்)

## வழக்குத் தீர்க்க வந்த அந்தணர்கள்!

### தரு

### பதம்

31. வந்தனர் சிங்காரமாக - வந்தனர்
வந்தனர் பாரீர்!
அந்தணர்கள் வெண்ணெய்நல்லூர்
சேஷவித்து மகாசனமும்!

முப்புரி நூல்தன்னைக் கையால்
முடிச்சிருந்தால் திருத்திக்கொள்வர்
அப்படியே பூஞ்சிகையை
அவிழ்த்துதறி முடித்து...

ஒருவர் சுலோகஞ் சொல்ல
ஒருவரதற் குறைசொல்ல
ஒருவரதற் கல்லவென்ன
ஒருவரதற் காமென்ன! (வந்தனர்)

திருவெண்ணெய் நல்லூரில் கூடிய அந்தணர்கள் முப்புரிநூலுடனும், உதறிக்கட்டிய குடுமியுடனும் கூடினார்களாம்; ஒருவர் சுலோகம் படிப்பாராம்; மற்றவர் அது பொருத்தமில்லை என்று மறுப்பாராம்; இன்னொருவர் அது சரிதான் என்று கூறுவாராம்! இப்படியாக இருந்ததாம் நீதி கூறவந்த பிராமணர் நிலை!

## வசனம்

"அந்தச் சமயத்திலே கிழ விப்பிரானருஞ் சுந்தரனாரும் மகாசனங்களைப் பார்த்துச் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (14)

## 'எங்கள் வழக்கைத் தீருங்கள்'!

## தரு

32. அய்யங் கார்கள் வெண்ணெய்நல்லூர் புங்கனூர்
சேஷ வித்துவ மகாசனங்கள்
வெய்ய தாயோர் சண்டை வந்து
வியாச்சியமாய் இருவர் வந்தோம்
பாலை நீரை வேறே பிரிக்கும்
அன்னம் போல நீங்கள்
ஐயமார் நாங்கள் சொல்லும்
வழக்கதனைத் தீர்க்கு வீரே!

(திருவெண்ணெய் நல்லூரில் பிராமணர்கள் கூடியிருக்கிறார்கள். அவர்கள் முன்பு சிவனும், சுந்தரமூர்த்தி நாயனாரும் வழக்குதீர்க்க நின்று கொண்டிருக்கிறார்கள். அப்போது, " பாலையும் தண்ணீரையும் வேறுவேறாகப் பிரித்து எடுக்கத்தக்க வழக்கைத் தீர்த்துவையுங்கள்! என்று இருவரும் திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணர்களிடம் முறையிடுகின்றனர்.)

## வசனம்

"அந்தச் சமயத்திலே மகாசனங்கள் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (15)

## விருத்தம்

33. அங்கனா ரூரன் தன்னை யங்கவன் கையிற் கட்டுங்
கங்கண மிருக்கத் தானே கங்கணம் கட்டி வந்து
துங்கவிப் பிரனையும் பார்த்து
துவக்க்ஷி யாக்ஷி களுஞ்சொல்லி
யிங்ஙனே வாக்கு மூலம் மெமக்குநீர் சொல்லு வீரே!

(துவக்ஷி யாக்ஷி - வாதி, பிரதிவாதி)

## வசனம்

“அந்தச் சமயத்திலே கிழ விப்பிரனார் வாக்குமூலஞ் சொல்லுகிற வசன மெப்படி யென்றால்,” (16)

## ‘ஆய்ந்து நீதி சொல்லுங்கள்!’
## தரு

34. அசேஷ வித்துவா மகாசனங்களே!
இருவர்தம்மி லாக்ஷியவனுந் துவக்ஷி நானுங்காண்
விசேஷ மாதவா லெழுந்துனான் வாக்குமூலம்
விபரமாய்ச் சொல்ல நீங்கள் கேளுங்கோள்!

இவர்கள்பாட்ட னாரூரன் முன்னமே அடிமையாக
யெமக்கு முறிவு யெழுதித் கொடுத்தனன்!
அவனுமவன் தன்புதல்வன் சடையனு
அன்றுமுதலா யனுதினமு மென்னேவல் செய்வன்காண்!

இப்புரம் இந்தப்பயல் தன்னையே சிறியனெனை
யேவலுக்குநான் துடர்ந்த தில்லைகாண்!
அப்படியே நானன்பா யிருக்கச் சேயென்னை
இவனறியா மலேயே மணஞ்செய்ய வந்தனன்!

... ... ... ...
இந்த மணமுனக்கு வேண்டா மெனச்சொல்லி
எந்தன் பின்னுடனே யெழுந்து வாவென்று
எத்தனை பரிவாய் அழைத்தும் ...போலென

இந்தப் பயல தும்பி யேயெனைப்
பித்தனென்ன பிள்ளைநான் வெகுகோப மாகிய
இவன்தன் மடியைப் பிடித்தி ழுத்தன்!
இழுத்த போதிலே இழுத்தலாமோ வென்றவனைத்

தானுமே வைது திட்டியு மெழுந்துமேல்
இழுத்த போதிலே இழுக்க லாமோ
என்றவனைத் தானுமே வைது திட்டியு
எழுந்துமேல் விழுந்த திர்ந்து போகவே

வழுக்கி மெத்தவும் பிடித்துத் தள்ளியே
    கூகூ வென்று நான் வாய்தி றந்தழத்
துடுக்கு செய்தனன் செய்த தன்றியும்
    கையிலி ருந்த தோரெதிரிடை முறிசீட்டுத்

தன்னையும் கிழித்து வீசினன்!
    இவன்செய்த கொடுமையைக் கிழவ நானினி
யாருடன் சொல்லி யாறப் போறேன்காண்!
    மூல பத்திரம் தன்னைப் பாருங்களோன்!

இவர்கள் பாட்டனார் முதலெ முத்தைச்
    சோதித்துப் பாருங்கோள் சால வேஇது
ஆய்ந்து பாருங்கோள் பார்த்து நீரினித்
    தர்ம மாம்படிச் சொல்லு வீரே!

(திருவெண்ணை நல்லூர்ப் பிராமணர்களிடம் வழக்கை விரிவாகக் கூறுகிறார். கிழவன் உருவில் வந்த சிவன்! சுந்தரமூர்த்தி நாயனாரின் பாட்டன் (அவர் பெயரும் ஆரூரன் என்பதே) இவனுக்கு அடிமையென்று ஓலை உள்ளதாம்; அந்த ஓலையில், பாட்டனும் அவரின் பிள்ளை வமிசமும் அடிமைகள் என்று உள்ளதாம்! எனவே, சுந்தரமூர்த்தி நாயனாரும் அடிமைதான் என்பது சிவன் வாதம்!)

## வசனம்

"அந்தச் சமயத்திலே சுந்தரர் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (17)

## 'குடியைக் கெடுத்துவிட்டாரே!'
## தரு

35. யேதொன்றும் நானறியேன் என்னவென்று
சொல்வேனய்யா?
நீதிநெறி யில்லா நிந்தைவந்து வாய்த்ததய்யா!
வருநாவ லூர்ப்புகழும் வளமை பெருமெங்கள்

திருநாவ லூரிங்குச் சேர வந்துதித் தாரென்றே
தந்தை தந்தை ஆரூரர் சடைய ரெந்தை நாள்முதலாய்
எந்தநாள் வரையும் நாங்க ளிருந்த தெல்லாம்
புத்தூர் சடங்கவியார் தையல் தன்னை
வரையவன்றே இப்பொழுது மண்மீதிலிருந் தாகாதே!
வந்தனர்காண் இவராரோ மத்திவரை நானறியேன்
அந்தணனா ரிவாரென்னை
அடிமை யெனச்சொன்னார்!
இந்தமணம் வேண்டாம்காண்
இனிமனைவிட் டெழுந்துரு என்றார்!
சொந்தமெனக் கேவல்செய்ய
தொடர்ந்துபின்னே வாவென்றார்!
யொன்றைத் தன் கையில் பிடித்துக் கொண்டு
வாதுகள் செய்தே என்னை வந்து மடிபிடித்
திழுத்தார்காண்!
அடித்தே னென்றார் பிடித்தே னென்றார் என்றார்
குடித்தன மாயிருந்த எங்கள் குடிவாழ்க்கை
குலைக்க வந்தார்!
காலம் வந்தால் கறுப்பு வந்தால் காவலர்கள்
தெண்டங் கொண்டால்
ஏலங்கூறி எனது பாட்ட ஏதுக்காய் விலைப்பட்டான்?
அந்தணர்கள் அடிமைப்பட ஆராலுங் கேட்டதுண்டோ?
எந்தடவோ இனியிதனை ஈர்ந்தறுத்துத் திறப்பீர்; நீரே!

(முன்னே சிவனார் கூறிய வாதுரைக்குப் பதில் இறுக்கிறார், சுந்தரமூர்த்தியார், அந்தணருக்கு அடிமை பூணுதல் என்பது எங்கும் நடவாததாயிற்று! அப்படி இருக்க, இக்கிழவர் இவ்வாறு கூறுவது நியாயமா? எங்கள் குடி வாழ்க்கையையே கெடுத்து விட்டாரே! நீங்கள் கேட்டு நியாயம் கூறுங்கள் என்று முறையிடுகிறார் சுந்தரர் சடங்கவியார் - சுந்தரரின் மாமனார்.)

## ‘மூலச் சான்றைக் கொடுங்கள்!’
### வசனம்

“அதோ நல்லது யிவர் வாக்குமூலம் கேட்டோ மோகோ, கிழவனாரே! உம்மிட கையிலே யிருக்கிற சாதனத்தை வரக்காட்டுமையா!” (18)

## ‘மூலப் பத்திரமும் கிழிக்கப்பட்டால் என்னசெய்வீர்?’
### திரிபுடை

36. எந்தன்கை முறிகொண்டு வாவென
இசைக்கிறீர் மறையந்த ணீர்இனி
அந்த வோலையைக் கொணர
இப்பொழுது அஞ்சுவேன் காண்!

ஏதுக் காயெனி ல்முன்னமென் கையில்
எதிரிடை தனைக்கிழித்து வீசிய
சூதப்பய லங்கிருந்து பேசிய
துடர்ச்சி யாலே

முன்னமே செய்த செய்கை போலவே
மூலபத்திரந் தன்னைச் செய்திடில்
பின்னையுங் செய்திடில் பிள்ளையென்
செய்போறீர்? நானென்ன பேசுவேனே?

(மூல ஓலை ஆவணத்தைத் திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணார்கள் கேட்டதற்கு, சிவன், “மூல ஓலைச்சான்றைக் காட்ட எனக்குப் பயமாக இருக்கிறது! ஏற்கனவே என்ஓலையைக் கிழித்துப்போட்டவனாயிற்றே இவன்? மூலத்தையும் கிழித்துப் போட்டால் நான்பிறகு என்ன செய்வேன்?” என்றுகேட்கிறார்.)

### வசனம்

“ஆ! ஆ! விருத்தரே அதுக்கெல்லாம் நாமிருக்கிறோம்! எங்கள் கையிலே தாருங்கோளய்யா! ஆனால் இந்தாருங்கோளென்று கொடுக்க அது வாசிக்கக் கணக்கப்பிள்ளை வருகிற விதமெப்படி யென்றால்” (19)

(மூல ஆவணத்தைச் சிவனார்,திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணர்கள் கையில் ஒப்படைக்கிறார். அதை வாசிக்கக் கணக்குப்பிள்ளை வருவது கூறப்படுகிறது. மூல ஆவணத்தை நாங்கள் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளுகிறோம் என்று திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணர்கள் உறுதி தந்ததன் பின்பே சிவன் அந்த ஆவணத்தை அவர்களிடம் ஒப்புவிக்கிறார்.)

## கணக்குப் பிள்ளை வரவு!
## விருத்தம்

37. வேதனமா மரபு தன்னில்
விளங்குசீர் கருணர் கோமான்
ஆதியின் முக்கட் தேவன் ...
வள்ளல்
போதனா புரிக்கு வேந்தன் ...
சாதனை தனைவா சிக்கச்
சபைதனில் வருகின் றானே!

(கணக்குப் பிள்ளை, மூல ஆவணம் படிப்பதற்காகச் சபைக்கு வருகிறார்.)

## எழுத்தாணியுடன் கணக்குப்பிள்ளை தோன்றுதல்!
## தரு
## பதம்

38. கரணிக்காந்தனன் வந்தனன் இந்தக்
களரிக் குகந்து யர்ந்தணன்!
நயந்து மேலு யர்ந்தனன் - கோலோச்சி
அந்தணன் காலவி யந்தணரே (கரணிக்)

அரையி யெழுத்தாணிக் கூட்டினன் - மலர்
அங்கையில் பிடித்ததோர் ஏட்டினன்!
இங்கித னாட்டிய நல்லரு ணாட்டிய
மிஞ்சிய தாட்டிக மானோன்! (கரணிக்)

சுங்குதொங்கு சோமனுடுத்தனன்
பட்டுத் துப்பட்டி சுக்கத் தொடுத்தனன்
தடுத்தனன் விடுத்தனன்
நன்மை படுத்தன னாவோன்! (கரணிக்)

(கரணம் - கணக்கு; கரண என்பது. கரணி என வந்தது. கணக்குப்பிள்ளை இடுப்பில் எழுத்தாணி போட்டு வைக்கும் உறை சொருகியிருந்ததாம்; கையில் ஓலைச் சுவடியும் வைத்திருந்தானாம் காந்தனன் - சிறந்தவன்.)

## 'வாசியும் பிள்ளாய்!'

"ஆ ஆ மகா சனங்களே! அனைவருக்கும் தெண்டம், தெண்டமய்யா," "ஆசிர்வாதம்! ஆசிர்வாதம்! இந்தச் சாசனத்தை வாசியும் பிள்ளாய்!" "அப்படியே வாசிக்கிறேன் கேளுங்கோளய்யா!" (20)

## விருத்தம்

39. மதுவெண்ணெய் நல்லூர் திருநகர்ப் பித்த னார்க்கு
நாமவா ரூரன் சைவ நல்கிய அடிமை ஓலை
தாமினி பிள்ளை பிள்ளை தரந்தர மடிமை கொண்டோம்
இதற்கைய மில்லை ஆரூரன் எழுத்து மீதே!

(பித்தனார் - சிவனார்; சிவனுக்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் பாட்டனார் எழுதிக் கொடுத்த மூல ஆவண வாசகம் மேலே கண்டது அதன்படி, அப் பாட்டனும், அவரின் வழி வழி வரும் பிள்ளைகளும் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு அடிமை என்று ஆகிறது. இந்த வாசகத்தைக் கணக்குப் பிள்ளை மற்றவர்களுக்குப் வாசித்துக் காட்டினார்.)

## லிபி சோதனை கோருதல்!

### வசனம்

"ஆனால் சுந்தரா, உங்கள் பாட்டனாரூரன் உன் கையெழுத்து வேறே யிருந்தால், யிதுக் குமதுக்கும் லிபி சோதிக்கச் சீக்கிரமா யழைப்பாயும்,பிள்ளாய்"

"அப்படியே அழைப்பிச்சேனய்யா,"

ஆனால் சுந்தரர், "சேராது" கணக்குப் பிள்ளையும் பிள்ளைமிருக்கிற பிராமணரும் லிபி சோதினை பார்த்து, உண்டான படிக்குச் சொல்லுங்கோளென்ன' அவர்கள் சொல்லுகிற வயனமெப்படி யென்றால் (21)

(லிபி சோதனை – எழுத்துச் சோதனை; அஃதாவது சுந்தரமூர்த்தி நாயனாரின் பாட்டனாரின் கையெழுத்தும், வாதிடும் கிழவர் காட்டும் ஆவணத்தில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக உள்ளதா என்று பார்க்கும் சோதனை. தடயவியல் அறிவியல் அந்தக் காலத்திலேயே தமிழிரிடம் இருந்தமைக்கு இது சான்று!)

### விருத்தம்

40. எச்சமொன் றில்லை ஐயா
உடலுயி ரெழுத்து மெல்லா
மிச்சை யிசையதாய் நாங்கள்
யெழுத்தெழுத் தினையா ராய்ந்தோம்
அச்சம்கொண் டுறைந்த பொன்னின்
மாத்தெனப் பார்த்தோ மையா
அச்சிலே போட்ட தென்னல்
ஆகிய எழுத்துத் தானே!

(திருவெண்ணெய் நல்லூர் பிராமணர்கள் சுந்தரமூர்த்தி நாயனாரின் பாட்டன் கையெழுத்தையும் பாட்டன் எழுதி தந்ததாகக் கிழவர் தந்த ஓலை எழுத்தையும் சோதித்தனர்; இரண்டும் ஒன்றாக இருப்பதைக் கண்டறிந்தனர்.

எச்சம் குறை; பொன்னின் மாத்தென தங்கத்திற்கு மாற்று உறைத்துப்பார்ப்பது போலப் பார்க்கப்பட்டதாம். அச்சுவார்ப்பு , இங்கே 'பிரிண்ட்' என்ற பொருள் ஏலாது.)

## வசனம்

"அந்த விசேஷத்தைக் கேட்டு அந்தச் சாசனத்தைக் கிழவனார் கையிலே கொடுத்து மகாசனங்கள் சுந்தரருடனே சொல்லுகிற வசன மெப்படி யென்றால்" (22)

## 'கிழவர் பின்னே போகவேண்டியது தான்!'
## சந்த விருத்தம்

41. பழுதுபிழை யேதுமில்லை
பார்க்கிலிச் சுந்தரனே!
யெழுதி வழக்கில்லை யென்றே
யியம்புவது மறியாயோ?

முழுதுமத னாவிந்த
முதியவர்வழக்கே செல்லுங்காண்!
அழுதபிள்ளை பால்பெறுமென்
றவர்பின்னே நடவாயே!

'ஓலை எழுத்து, கிழவனார் பக்கமே நிற்கிறது; எனவே,உன் பக்கம் நியாயம் இல்லை!நீ பேசாமல் இக்கிழவர் பின்னே நடப்பது தான் நியாயம்!" என்று தீர்ப்புக் கூறினார்கள் திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணர்கள்.)

## வசனம்

"அப்போ கிழ விப்ரரை அழைத்துச் சொல்லுகிற வசன மெப்படியென்றால்," (23)

## 'கிழவனாரே உம்வீடு எது?'
## திபதை

42. முதிய வந்தணரே மொழிவது கேளும்
பதியுமும் மடிமைப் பத்திர மதனிற்

காக்ஷியும் புத்தியும் தானில்லை யெனினும்
ஆக்ஷியாய் எழுத்தொன்று மாத்திரம் இருந்ததால்

செயமும தெனவே செப்பினோம் இனியே!
சுயமதாய் அவனைத் தொண்டுகொண் டருளும்

இப்படி யாக யிருந்துதே யினிநீர்
மெய்ப்படி யாக விளம்புதல் வேண்டும்

வித்தக மான வெண்ணெய்நல் லூரிற்
பித்தனா ரெனவே பேருஞ்சொன் னதனால்

உம்மிட முகத்தை யொருக்காலும் காணேம்
உம்மிட பேரை யொருக்காலும்

இந்தநாள் வரைக்கும் எமையறி யாமல்
இந்தவூர் தன்னிலே யெங்கனே வீடு?

கையிலே நெல்லியைப் போற்காண நாங்கள்
ஐயமே யில்லாமல் அறைந்திடு வீரே!

("ஐயா கிழவனாரே! பார்வையும் புத்தியும் உமக்கு இல்லை. என்றாலும்,நீர் காட்டிய ஓலை எழுத்து உமக்குச் சாதகமாக இருப்பதால் உம் பக்கம் தீர்ப்பளித்தோம்! இனிமேல் சுந்தரரை நீர் அடிமையாக நடத்தலாம்! அது சரி!பித்தனார் என்று உம் பேரு உள்ளதே தவிர, இந்தப் பேரை நாங்கள் திருவெண்ணெய் நல்லூரில் கேட்டதில்லையே! உம் முகத்தையும் இதற்குமுன் நாங்கள் பார்த்ததில்லையே! உம்மவீடு எங்கு உள்ளது?" என்று கிழவர் வேடத்தில் வந்த சிவனாரைப் பார்த்துக் கேட்டனர் திருவெண்ணெய் நல்லூர்ப் பிராமணர்கள்.)

## ‘என் பின்னால் வந்தால் காட்டுகிறேன்!’
## விருத்தம்

43. அந்தணீ ரும்மை யெல்லாம்
    அறியோம் நாமே நீங்கள்
எந்தமை யறியோ மெனநீர்
    இப்பொழுது எந்தன் பின்னே
வந்திடு வீரே யாகில்
    வாழ்வு தன்னைச்
சந்ததி தன்னைப்பெண்டிர்
    தன்னடிப் காண்பிப் பேனே!

(“அந்தணர்களே! என்னை உங்களுக்குத் தெரியாது; ஆனால் உங்கள் அனைவரையும் எனக்குத் தெரியும்! இதோ இப்போதே என் பின்னால் வாருங்கள்,என்வீடு, வாசல்,மனைவி, மக்கள் அனைவரையும் உங்களுக்குக் காட்டுகிறேன்!என்றார் கிழவர்.)

### வசனம்

“இப்படியாகக் கிழவனார் சொல்ல யெல்லாரும் எழுந்து போறபோது வீதியிலே கிழ விப்ரரைக் கண்டபேர் சொல்லுகிற விதமெப்படி என்றால்,” (24)

### சம்பை

44. ஆருரார் குடிவாழ்க்கை யழிக்க வந்தார்
பாரீரிந்த ஊருராமிவன் மாய்மைக்குள் ளானார்;

பாரீர் தாலிகட்டும் வேளைவந்து தடுத்து
போரிட்டந்த நீலியிட்ட நிந்தையெனப் பாரீர்!

அடிமையெனச் சொன்னதுவும்
    அதுக்கோலை கொணர்ந்ததுவும்
கொடுமையிவன் கூத்தனுக்குக் கூத்தனி வன்கண்டீர்!

அந்தோலை கிழித்திடினும் அதுசவா தெனச்சொல்லி
முந்தோலை யெனவேறு முறிகொணர் தல்பாரீர்!

முறிகொணர்ந் தாலுவேறு மெய்யாக வம்முறியில்
மாறுபடா வெழுத்திருக்க வகைசெய் தான்பாரீர்!

தள்ளினால் விழுங்கிழவன் தன்வலிமை பாருமெத்த
துள்ளுவதும் பேசுவதும் துடருவது தும்பாரீர்!

யிந்தஆரூர் தனையிழுத் தடிமை யெனச்சொல்லு
மந்தவாய் விஷமாகா மரப்பொம்மை

மெத்தத் துள்ளி யிவன்வீண் சண்டை யிட்டிழுத்த
கைத்தலத்துக் கெந்நாளும் கப்பரை வாராதோ?

காயமிரு கூறாகிக் கண்கள்நெருப் பாயெரிந்து
மாயனிவன் இருகாலும் வாதமா காதோ?

துடித்து வருமிவன் வீடுசுட்ட காடாகி
அடுத்தபொழு தாகாச மாகிப் போகானோ?

ஊரார் புலம்பல் காட்சி இது! ஊர் மக்கள் தங்களுக்குள் வயிறெரிந்து பேசிக் கொள்ளும் சுவைமிகு நாடகக் காட்சி.

சவாது - பிரதி, நகல்

(ஊர் மக்கள், "ஆருரரின் குடியைக் கெடுக்க ஒரு கிழவனார் வந்தாரே! ஊராரும் அவர் பக்கம் நியாயம் உள்ளது என்றனரே! இவன்சரியான கூத்தனுக்குக் கூத்தனாக அல்லவா இருக்கிறான்? ஓர் ஓலை காட்டினான்; அதைக் கிழித்துவிட, அதறகும் மூல ஓலை உள்ளது என்று காட்டுகிறானே! ஒரு தள்ளு தள்ளினால் கீழே விழுந்துவிடுவான்! அப்படிப்பட்ட கிழவன் இப்படியெல்லாம் துள்ளுவதைப் பாருங்களேன்! இவனுடைய இரு கால்களும் விளங்காமல் போகட்டும்! கண்கள் நெருப்பாக எரிந்து சாம்பலாகட்டும்! இவன் வீடு சுடுகாடு ஆகட்டும்!" என்று ஏசினர்.)

## சிவன்கோயிலுள் சென்று மறைந்தார்!
### வசனம்

"இப்படியாகக் கண்ட கண்ட பேரெல்லாம் நிந்திக்க மகாசினங்காரர் சுந்தரரும் பின்துடர்ந்து வரக்,கிழவந்தணர் கோயிலே புகுந்து அந்தர் தியானமானபோது, சுந்தரருக்கு ஞானம் வந்து அரண்டு பிரண்டு அழுது புலம்பும் விதம் எப்படி யென்றால்." (25)

(அந்தர்தியானம் - மறைதல்)

## சுந்தரமூர்த்தி நாயனாரின் பரவசப் பேச்சு
### கலிப்பா

45. நிர்மலமாய் நிற்குணமாய் நிரஞ்சனமாய் நிறரியமாய்
நின்றுலகைப் படைத்தளித்துத் துடைப்பவன் நீ!

யென்னையொரு பொருளாகி எழுந்தருளி வையமிசை
மன்னுமொரு வேதியன்போல் வந்தென்ன திருவருளோ?

மாலயனு வலியவந்தே அடிமைப்பட் டொருகொத்
தோலதனை ஈவோமென் றுரைக்கவுங்கே ளாதவன்நீ!

யேதுமறியா திருக்குமெனை வலியவந் தடுமைசாதன
மீதெனக் காட்டித் தானாண்டு கொண்டதென்னோ?

காளியுடன் வாதாடுங் கர்த்தாவை யேயொப்ப
ஞானியனை வாதாடி நயந்ததென்ன திருவுளமோ?

சுருதிமறை யால்முனிவர் சித்தரிக்குங் கர்த்தா நீ
பொருதிமக னாயெந்தன்
புகல்வசையைப் பொறுத்ததென்னோ?

தேவர்களு முனிவர்களுந் தீண்டாத திருமெய்யைத்
தாவியிழுத் தேனானென தன்னளவு
வஞ்சித் தித்ததேனோ?

அன்னதொரு சுரர்முறைகேட் டஞ்சேலெனக் காக்கின்ற
முன்னவனீ கூகூவென்று முறையிட்ட கூத்தனென்னோ?

தலைவன்நீ நானென்ற சண்டையிட்ட மாலயனின்
நிலைவழக்கைத் தீமலையாய் நின்றுதீர்த் தவன்நீ!

துறையிருந்து கைகட்டிக் கொண்டு, வெண்ணை நல்லூரில்
மறையவர்கள் முன்பாக வழக்குரைத்து நின்றதென்னோ?

யித்தனையு மென்பொருட்டோ லேயதின்நீ முன்னாளில்
மெய்த்தவம்நான் செய்ததென்னோ வெளிப்பட்டுச்
சொல்லாய்!

அக்கியான மணந்தவன்நீ யடுத்துவந்து தடுத்ததனால்
சுக்கிரான மணம்புணர்ந்த சகித்தியவா சொல்கிறாய்,

ஆண்டவன்நீ ஆண்டாயே ஆண்ட படியென்னை
வேண்டியின்ன முன்போல வெளிப்பட்டு வாராயோ?

வாராத போதுமெந்தன் மன்னுயிரை ...
சீராக நானினியே செய்யும்வகை சொல்லுகிலாய்!

(நிர்மலம் - மாசற்று, நிற்குணமாய் - குணங்களுக்கு அப்பாற்பட்டு, நிரஞ்சனமாய் - மாசுஇலாது நிறரியமாய் - நிற் அரியமாய்; எங்கும் எளிமையாய்; அரியவாய் என்பது, பாடலில் அரியமாய் என வந்தது. அக்கியானம் - ஞானமின்மை; சுக்கிரானம் - பரமஞானம்.

இப்பகுதியே சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்வில் ஏற்பட்ட திருப் பத்தைக் காட்டும் பகுதி, சுந்தரர், சுந்தரமூர்த்தி நாயனார் என ஆவதற்கு இம் மாற்றமே காரணம். திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலுக்குள் சிவனார் மறைந்ததும், சுந்தரருக்கு அதுவரை வாது செய்தது சிவனே என்று எண்ணத் தோன்றிற்று.)

### வசனம்

“இப்படியாக , சுந்தரர் புலம்புகிற சமயத்திலே, தேவர்கள் புட்பமாரி பொழிய துந்துபி முழங்க, ஆகாச மார்க்கத்திலே சுவாமி அந்தர்தியானமாய் நின்று சொல்லுகிற வசனம் எப்படியென்றால்,” (26)

## 'நாம் ஆட்கொண்டோம்!'
## திபதை

46. சுந்தர முதலே தொண்டநீ யாகி
எந்தன்சே வடிக்கீழ் ஏவல்செய் யுவைகாண்!
அந்த நாள்தனில் ஆங்க னோர்பொருட்டால்
வந்துநீ பிறந்தாய் மத்துன் பிறகே

வந்துநா முனையே வலியவாட் கொண்டோம்!
அன்னகா லையிலே ஆங்கமற்றி முற்று
மன்னியே யெனைநீ வன்மைசெய் ததனால்

மாமனோ கரமாய் அவன்தொண்ட னென்ன
மதிவனாம முனக்கு நாமளித் தனங்காள்!
இனியெமக் கெளிதா யிசைத்துவந் தமையாய்
கனிவினார் பதிகங் கழறுவாய் நீயே!

(சிவன், சுந்தரருக்கு கட்டளையிட்டுப் பதிகங்கள் பாடிவரும்படி கூறு கிறார். வன்மை செய்தது - கிழவனார் வேடத்தில் வந்த சிவனை இழுத்துத் தள்ளியது, ஓலையைப் பறித்துக் கிழித்தெறிந்தது முதலியன கழறுவாய் - பாடுவோம்.)

### வசனம்

"அந்தச் சமயத்தில் சுந்தரர் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்"
(27)

## 'நான் என்ன சொல்லுவேன்'
## விருத்தம்

47. சீதள மலரோன் மாயன்
தேடியுங் காண்கி லாத
வேத மாகம மீதெல்லாம்
விதித்துரை ... கிலாத

கோதியா உனது தெய்வ
குணம்பெரும் கடலை ஆய்ந்து
ஏதொன்றும் அறியா நாயேன்
ஏதெனச் சொல்லு வேனே!

(சீதளம் - குளிர்ச்சி சுந்தரமூர்த்தி நாயனார், இங்கு தன்னை, நாயேன் என்று அடக்கமாக உரைத்துக்கொள்கிறார்.)

## வசனம்

"அப்போ பரமேஸ்வரர், யென்னை 'நீ பித்தாவென்று சொன்னபடிக்குப் பித்தாவென் றெடுத்துப் பாடி மேன்மேலுந் தலங்கள் தோறும் பாடும் பிள்ளாய்' சுந்தரர் பாடுகிற விதம் எப்படியென்றால்" (28)

## திருச்சிற்றம்பலம்

48. பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின் றேன்மனத்துள்
வைத்தாய்பெண் ணைத்தென்பால்
வெண்ணைநல்லூர் அருட்டுறையுள்
அத்தாஉனக் காளாகினே னல்லேன் எனலாமே

49. நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்ததெய்த்தேன் பெறலாகா அருள்பெற்றேன்
வேயார்பெண் ணைத்தென்பால்
வெண்ணெய்நல்லூர் ரருட்டுறையுள்
'ஆயாவுனக் காளாகி னேனல்லே னெனலாமே!

(இந்த இரு பாக்களும்சுந்தரர் தேவாரம் எனும் திருமுறையில் அச்சி டப்பட்டவைகளே. திருவெண்ணெய்நல்லூர்ப் பதிகத்து முதலாம் ,இரண்டாம் பாடல்கள் இவை.)

## திபதை

50. பதிக மின்தளமாம் பண்ணினாற் பாடி
மதிவுனை சடையார் மகிமையைப் போற்றி

வெண்ணை நல்லூரை விடுத்தினி தகன்று
நண்ணியே தமது நாவலூர் வந்து

பவமகல் துறையூர் பாவியே சிவனே
தவநெறி யெனக்குத் தாவெனப் பாடி

மற்றுள பதியும் மகிழ்வினா லிறைஞ்சி
வெற்றிசேர் தில்லைமேவ நினைந்து

உந்து நீள்பெண்ணை நதியினனைக் கடந்து
அந்தியம் போதில் அதிக மாநகர்த்

தில்லை வந்துணுகித் தல முன்னே
சொல்லும் வாக்கின்றை யூர்சூழ் பதியெனவே

அருகிலோர் மடத்தி லமர்ந்திருந் தருளிய
பரிசினத் துடனே பள்ளிகொள் போது

முதியவந் தணராய் முக்கண ரணுகிப்
பதியவே தலையிற் பாதத்தை நீட்டிக்

கரந்துபொன் தூவும் கண்டுள முருகிச்
கரந்தநல் லருளைத் துதித்துடன் வாழ்த்தி

வடகங்கை யெனவே வருமொரு கேடில்
தடந்தித் தன்னையும் தாண்டியே யப்பால்

திருமாணிக் குழியுந் தினநகர் பரவி
அரியதில் லையிற்போய் அம்பல மணிந்து

அந்தரத் தொருவர் வாரூர்க் கினிய
சுந்தரர் வரவெனச் சொன்னதுங் கேட்டு

கொள்ளடங் கடந்து குறுகியே ஞானப்
பிள்ளையார் முன்னம் பிறந்த சீகாழி

மிகுந்திட வஞ்சி வெளிநின்று பரவி
கதிதிருக் கோலக் காவும் புன்கூரும்

வேறுள பதியும் விரும்பியே தொழுது
கூறுகா வேரி கொழுங்கரை சென்று

மயிலாடு துறையு மாகாளம் புகளூர்
கயிலாய் தம்மைக் கருதியே பணிந்து

நம்பனா ரருளால் நகருளா ரெவரும்
இன்பமா மனத்தி லெதிர்கொடு செய்ய

செய்யவா ரூரிற் சிறப்புடன் வந்து
அய்யனைப் பணிந்தே அருந்தமிழ் பாடிக்

காயமே யிருக்கக் கருத்துமே யிருக்க
நேயமாய்ப் பரவி நின்றார் தாமே!

(தலங்கள் தோறும் பாடி வரச் சிவன் கட்டளை இட்டதால், சுந்தரர் பலதலங்களுக்கும் செல்கிறார். அவர் செல்லும் ஊர்கள்மேல் காட்டப்பட்டன, தில்லை, சீர்காழி, திருக்கோலக்கா, திருப்புன்கூர், மயிலாடுதுறை, முதலிய ஊர்கள் வந்துள்ளமை காணலாம்.

காயம் - உடல்)

## பரவை நாச்சியார்
## வசனம்

"அந்தச் சமயத்திலே பரவை நாச்சியார் வருகிற வித மெப்படி யென்றால்," (29)

## பரவை நாச்சியார் வருகிறாள்!
## விருத்தம்

51. சீதள மலர்மா தென்ன
        செங்குந்த வேசி யாரிற்
பூதல மகிழ வந்து
        பொற்புடன் பிறந்த மின்னாள்
மாதங்கு சேனை சூழ
        மதிமுக மலர்ந்து பொன்னின்
பாதாளந் தொனிக்கப்
        பரவையார் வருகின் றாளே!

## பதம்

52. பரவை வந்தா ளிதோ பாரீர்! சிங்காரமாகப்
பரவை வந்தா ளிதோ பாரீர்!

பரவை வந்தாளிதோ பரத நூபுரமுடன்
கரச ரொருகையில் வளைகலீன் கலீனென (பரவை)

தனபாரக் கச்சிலொளி தகதக தகவென்ன
இடைக்கிண்கிணி யோசை கணீல் கணீலென (பரவை)

கடந்த காதினை மீண்டு கண்ணினை வாளியார்க்கத்
துடர்ந்து மேய்வந்து பட்டுசுறீல் சுறீலென (பரவை)

தாவியே சேடிமார்கள் சதனமெச் சரிக்கையென்ன
மேவியே யன்னம்போலே மெள்ளமெள்ள மெள்ள

பரவை வந்தாளிதோ பாரீர்! - சிங்காரமாகப்
பரவை வந்தாளிதோ பாரீர்!

(திருவாரூர்க் கோயிலில் பரவை நாச்சியார் வருகை காட்டப்படுகிறது. சிலம்பு ஒலிக்க, கைவளை ஓசையிட, கண்கள் ஓடிக்காட்ட, முலைக்கச்சு ஒளிவிட, அழகாக அவள் வந்தாளாம்.!

தனம் - கொங்கை; சேடி - தோழி)

## சுந்தரர் பார்வை!
## வசனம்

“இப்படியாக வந்து சுவாமியாரை சேவித்துத் திரும்புகிறபோது சுந்தரர் பார்த்துத் தம்முட மனசுடனே சொல்லுகிற வசனம் எப்படியென்றால்” (30)

## சுந்தரரின் மனம் பட்டபாடு!
## தோடி பதம்

53. ஆரோ யெவரோ யறியேன் மனமே!
அரனரு ளிதுதானோ?
சீரோதிய புட்பமன் மதனாசன் பட்டபூ தேவியோ
கமல சிங்காதப் பெண்ணோ? (ஆரோ)

மின்னல் வடிவோ? ஒளியாத துனாலந்த
விளக்கு மல்லநல்ல அவியாத துனாலே
கன்னலல்ல மதன் வளையாத தனாலந்த
காமனல்ல வுருவம் வந்ததாலே! (ஆரோ)

அன்னமல்ல சிறகில்ல ததனாலே!
ஆவியல்ல உடல்கப் பறந்ததாலே!
சொன்னமல்ல மாத்தில்லா ததுனாலே!
மத்தரூபமல்ல மறுவில்லா ததுனாலே!

சித்திரமல்ல காலில் நடக்கிறதாலே
தெய்வமல்ல விழியிமைக்கிறதாலே
ருத்திர வாள்விழியார் கூத்தனென்று
கூத்தனல்ல நின்று கொல்லததனாமலே! (ஆரோ)

ஆராரோ யெவரோ அறியேன் மனமே
அரனரு ளிதுதானோ?

(ஐயமும், ஐயநீக்கமுமாக எழுதப்பட்ட மேற்பகுதி சுவையான நாடகப் பகுதியாகும்.

மதன் - மன்மதன்; சொன்னம் - தங்கம்; சுரூபம் - உருவம்; ருத்திர - கொடிய; கன்னல் - கரும்பு; கூத்தன் - கூற்றுவன்.

ஒளியாதலால் மின்னலல்ல! அவிந்துபோகாததால் விளக்கல்ல! மன்மதன் வளைக்காததால், கரும்பு மல்ல! ஓர் உருவம் இருப்பதால் காமனும் அல்ல! சிறகு இல்லாததால், அன்னப்பறவையும் இல்லை! உடல் மூடியிருப்பதால், ஆவியும் இல்லை! மாற்றுக் கூ ற இயலாததால் பொன்னும் அல்ல! களங்கம் இல்லாததால், மதியும் உருவமும் அல்ல! காலால் நடப்பதால், சித்திரம் என்றும் கூறமுடியாது! விழியின் இமை இமைப்பதால், தெய்வம் என்றும் கருத இயலாது! கொடிய வாள் போன்ற விழியுள்ள இவள்,கூற்றுவனும் அல்ல, ஏனென்றால் கொல்லவில்லையே?)

### வசனம்

"பரவையார் தன் மனதுடனே சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (31)

## பரவைநாச்சியாரின் காதல் தடுமாற்றம்
## காம்போதி ராகம்

54. சந்திரனா? யிந்திரனா? சுக்கிரன்தானோ? - எங்கள்
தம்பிரான் பேரும் கந்தனோ? மனமே!
சுந்தர வசந்தனோ? அந்தரதிசயந் தானோ?
சுபமத்த மன்மதனோ? மனமே!

இவ்வுருவமு மெவ்விடத்தும் கண்டதில்லை கேட்டதில்லை!
இவரை எவ்வகை அணுகவோ, மனமே!
அவ்வுருவம் தன்மீதி லாசைகொள்ள லாமோ?
வென்றருவ மதன்பொருத லானான்மனமே!

இருவர்கண்ணு மொன்னுக் கொன்னு கலைக்கண்ணியாகவே
இழுக்குதினி என்செய்வோ மனமே!
ஒருவரிருவர் தம்மைவிட்டே காலெழுவ தில்லை
உய்வண்ண மெவ்வணங் காண் மனமே!

இதுவரைக்கு மொருவர்தம்மை இதயத்தெண் ணாதநான்
இவரை யெண்ணுவ தென்னமோ மனமே!
மதிவிதியின் முறைமையோ? ஈசனருளோ?
இனிவரவந்த வழிதெரியு மல்லோ மனமே!

(காம்போதி இராகத்தில் பாடவேண்டிய இந்தப்பாடலில் திருவாரூர் கோயிலில், சுந்தரரைப் பார்த்ததால் பரவைநாச்சியார் என்ற இளம்பெண்ணுக்கு ஏற்பட்ட மனக் கலக்கம் விவரிக்கப்படுகிறது. சுந்தரமூர்த்தி நாயனாரின் உருவம் அழகான உருவம் என்று காட்டப்படுகிறது.)

## கொங்கை விம்முகிறது!
## விருத்தம்

55. மனமுமுயிரு மிவரைவிட்டு
வருகுதில்லை காண்வேறு கூட்டை
பினமுமுன் மாயநாண மொன்றே
பெயர்ந்தே யிழுத்துப் போகுதையோ!

தனமு மலைபோல் வளர்ந் தெழுந்து
தழைந்தே குழைந்து விம்முது!
காணினி யென்செய் னீசனருள்
எனமோ யில்லா தேகுவனே!

(சுந்தரமூர்த்தி நாயனாரின் மீது மோகம் கொண்ட பரவை நாச்சியார் புலம்பும் புலப்பம் மேலே கண்டது.

பினமு - பின்னும்; எனமே - என்னவோ)

## வசனம்

"இப்படியாக சுந்தரர் விப்பரவக்கிரனை யிவளாரென்று விசாரி என்றுசொல்ல, அவரை விசாரித்து வந்து தேவடியாரில் பரவையாரென்று சொல்லக்கேட்டு , விரக தாபம் படுகிற விதமெப்படி யென்றால்," (32)

## காதல் துயரிலிருந்து மீட்கச் சிவனை வேண்டல்!

### தரு

56. வஞ்சி யொருத்தி வானத்து மின்போல
வந்தனள் கண்டனன் சிவனே! - அவள்
மாயா வலைவீசி பொல்ல
மயக்கிட்டுப் போயினள் சிவனே!

மைக்கண் கணையை புருவவில் தன்னை
வளைத்துத் தொடுத்தனள் சிவனே! - இவனார்
நடுவே மதன்வந்து
பூவாளி செய்யுறான் சிவனே!

இவனெய்வது மல்லால் இவன்பரிவாரங்கள்
எல்லாம் பொருகுது சிவனே!ஓகோ
மதனிது னாலல்லோ
முன்னுளுத்த பொடியானனான் சிவனே!

அவனுயிர்தனை மீளவருள் கொண்டளிக்கு
முறையல்லோ சொல்லவேணும் சிவனே!
சந்திர னாரும் குளுந்தவ னென்னைத்
தழல்கொண் டிறைக்கிறான் சிவனே! அந்தச்

சந்திரன் பின்னும் பிழைக்கவே தேய்க்குமுன்
தாளினை யென்சொல்வேன் சிவனே! - உனக்கு
விஷத்தை யளிக்குங் கடல்தான்
உருக்குது யென்சொல்வேன் சிவனே! - அந்த

ஓதக்கடலைச் சுவறாமல் விட்டவுன்
மைந்தனை என்சொல்வேன் சிவனே! - அந்தப்
பெண்மாயத் தகப்பட்டால் ஈதெல்லாம்
பாரென்று ஒறுக்குது சிவனே! - என்னை

ஆண்டநீ சும்மா இருக்கத் தகாதினி
அருள்செய்ய வேணுங்காண் சிவனே

(உளுத்தபொடி - சாம்பல், உரம் - அசை. சுவறாமல் - வற்றாமல்; ஒறுத்தல் - தண்டித்தல்.)

காமன் என்மீது மலர்க்கணைகளைப் போடுகிறான்! அவன் என்னைத் துன்புறுத்துகிறான்; அதனால்தான் அவனை முன்பு, சிவனே, நீ எரித்துச் சாம்பலாக்கினாய் போலும்! என்று புலம்பும் பகுதி நயமுடைத்து.)

## வசனம்

“ இப்படியாக சுந்தரர் விரகதாபமாயிருக்க, அங்கே பரவை நாச்சியார் பாங்கியுடனே சொல்லுகிற வசனம் எப்படிஎன்றால்,” (33)

## பரவையாரும் புலம்புகிறாள்!
## விருத்தம்

57. பாங்கியே தியாகர் தம்மைப்
பணிந்துநான் வந்த போது
ஆங்கணோர் ஒப்பிப் லாத
அதிசய வடிவு மாகி

பூங்க னைமத னென்ன
புரிந்தனன் அவன்தான் ஆரோ?
சாங்கமா யெனக்கு நீயே
சாத்துவாய் சாத்துவாயே!

(தியாகர் - சிவன், சாத்துவாய் - சாற்றுவாய் - சொல்லுவாய்.

“கோயிலில் நான் கண்ட அநத் அழகன் யாரென்று எனக்கு நீ கண்டு சொல் தோழி” என்கிறாள். பரவை நாச்சியார்.)

## 'அவர் பெயர் சுந்தரன்'

## விருத்தம்

58. அன்னமே கேளாய் நீயே
அவர்முனைப் பாடி நாட்டில்
பன்னுகீர் நாவ லூரிற்
பதிந்துவாழ் சைவ ரானோர்

மன்னிய சிவன்புத் தூரில்
வலியவாட் கொண்ட தொண்டன்
இன்னமு மறிகி லாயோ
இனியசுந் தரன்காண் பேரே!

(பரவை நாச்சியாரின் தோழியானவள் பரவையாரை மயக்கியவர் பெயர் சுந்தரன்; அவர் திருமுனைப்பாடி நாட்டில் , நாவலூர் என்ற ஊரில் பிறந்தவர் என்ற விவரத்தைத் தெரிவிக்கிறாள்.)

## வசனம்

"இப்படியாக அந்த விசேஷத்தைக் கேட்டு விரகதாப மிஞ்சி பரவையார் சொல்லுகிற வசன மெப்படி யென்றால்" (34)

## பரவைநாச்சியாருக்கு மையலால் துன்பம்!

## தரு

59. எந்தனாவி தோழியே நானேது செய்வேன்?
கண்ணிற் கண்ட போதே!
சிந்தை தனிலவர் தாமொரு
திருடர்போலே வந்துபூந்தார்!

தாளிணைக்கோ? மலர்ந்தசெந்
தாமரை முகந்தனக்கோ?
தோளிணைக்கோ? மார்பிணைக்கோ?
சுந்தரர் ஒய் யாரத்துக்கோ? ஏதினுக்கோ!

சிந்தைதனி லேராளாமா யாசை கொண்டேன்!
இவர்தமது சொரூப மெல்லாம்
அங்கே இருக்கட்டும் அவர்சிறிய நகையொன்று
ஆவிதனை உருக்கு தையோ!

மையெலொன்னு வந்தாலே வளைகலை
நாணமும் போச்சு!
செய்யும்வகை காணேனினி

சிவளருளைத் தெரிகிலேனே!

(கலை - ஆடை. பூந்தான் - புகுந்தான். வளை - வளையல்.

ஐயோ, சுந்தரரைக் கண்டதும் என் வளையல், இடுப்பு ஆடை எல்லாம் கழறுகிறதே! நான் என்ன செய்வேன் தோழி! சிவனின் அருள் எப்படி இருக்குமோ?என்றெல்லாம் புலம்புகிறாள் பரவை நாச்சியார்.)

## கலித்துறை

60. சுந்தர னீசனுக் கன்பன்
விகாரத் துயரந்தனை
எந்தடவே கண்டிருப்போ மெனக்காணா
தேகி யப்பால்
முந்தவெய் யோனந்த மேற்கே
மறைந்தென்ன மூடியிருள்
அந்தியும் தேகமும் அந்தரத்தே
நின்ற தம்புலியே!

(வெய்யோன் - ஞாயிறு; அம்புலி - திங்கள்.

சுந்தரரால் எனக்கு ஏற்பட்ட துன்பத்தை எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டு இருக்கும் ஞாயிறு? அதுதான் மேற்கே மறைந்து விட்டது! ஏ அம்புலியே, இப்போ என் முகம் வாடுகிறதே! என்று புலம்புகிறார் பரவையார்!)

## விருத்தம்

61. வெண்ணில் புவிமடந்தை வெண்படாம் போத்ததென
விளங்கித் தோன்றத்
தண்ணுலவு கடல்தனது அமைந்தரை சரணத்தெனத்
தருக்கிப் பொங்க
குண்ணுலவு குளிர்காத்துக் கொழுந்தெழுந்து
நெருப்பையள்ளிக் கொண்டு வீச
எண்ணிப்பல கமலமலர் சுடுகரங்கள் தொடுத்தமதன்
எய்கின் றானே!

(வெண்ணில் - வெண் நிலவில், தண்ணுலவு - குளிர் கொண்ட; குண்ணுலவு - குளிர்ச்சிபொருந்திய

வெண்ணிலாவின் வெண்ணிற ஒளியால்பூமி, வெள்ளை ஆடை போர்த்தியது போல உள்ளதாம்! கடலானது, அந்நேரத்தில் பொங்கிக் கரையில் மோதுகிறதாம்! குளிர்காற்று,நெருப்பை அள்ளிப் பரவை நாச்சியார் மீது வீசுகிறதாம்! காமத்தால் அவள் பட்ட துன்பம் இது!)

## வசனம்

"பின்னையும் பரவைக்கி விரக தாபமிஞ்சி சந்திரனை தூஷனை பண்ணுகிற விதம் எப்படியென்றால்," (35)

## தரு

62. வாழியே நீ, என்னையல்லால் மற்றெவற்குங்
குளுந்திருந்தாய் வெண்ணிலாவே!
ஏழையென்றோ காயலுற்றாய் எனக்குமுனக்கும்
பகையென்னவோ!வெண்ணிலாவே

உந்தனையென் முகம்போலவே பொப்பார்கண்
டுறவுகொண்டேன் வெண்ணிலாவே!
அந்தஉறவும் பாராமல் அழல்போலவே
காயலுத்தாய் வெண்ணிலாவே!

நீமுதலே குருத்துரோகி நினக்குமொரு
உறவுண்டோ வெண்ணிலாவே!
தீமையான நின்னைப் பாம்பு தீண்டியுங்
கொல்லாதென்னமோ வெண்ணிலாவே!

தேயத்தவீரன் பண்டு நின்னை
சீவனுடன் விட்டதென்ன வெண்ணிலாவே?
வாய்த்தமயல் கொண்டுவரும் நாதர்செய்த
பாவமென்னோ வெண்ணிலாவே?

(காமத்தால் அவதிப்படும் பரவை நாச்சியாருக்கு நிலவு சுடுகிறது! எனவே அவள் நிலவை நிந்திக்கிறாள்! உன்னைப் பாம்பு தீண்டியதே அப்படியே சாகடித்திருக்கக் கூடாதா? என்று பேசுகிறாள்.)

## மதன் தூஷணை

63. என்னையெதுக் கெய்யுறாய் மதனா? - உனக்கு
என்னுடன் ஏதுவகை மதனா,
உன்னையின்று கும்பிடுறேன் மதனா!தமியேன்
ஒருத்தியென்னை மன்னியாய் மதனா!

நிமலருக்கு நானடிமை மதனா - அவர்தாம்
நினையெரித்த தறியாயோ மதனா?
கமலவிழி துயிலாது மதனா - தனித்த
கன்னிமேற் பொருதுவீரோ மதனா!

## தென்றல் தூஷணை

64. குண்ணிலே பிறந்துவந்த தெண்ணலாரே - மெத்த
கொடுந்தழல்போல் வீசுவரோ தெண்ணலாரே?
மண்ணுலகிற் சஞ்சரித்த தெண்ணலாரே - தனி
மாதி தன்னைச் காயுவனோ தெண்ணலாரே?

அய்யய்யோ யெனையுறுத்துறாய் தெண்ணலாரே உன்னை
அரவ முழுங்காதோ தெண்ணலாரே
செய்யும் வகை யொண்ணுமில்லை தெண்ணலாரே - இனி
சிறியயென்னைக் காத்தருளாய் தெண்ணலாரே!

(அரவம் - பாம்பு; தெண்ணல் - தென்றல்; குண்ண - குன்ற)

### வசனம்

"அந்தச் சமயத்திலே தோழிமார்கள் பண்ணுகிற சயித்திய உபசாரங்கள் போராமற் படிக்குச்சொல்லுகிறவிதமெப்படி யென்றால்" (36)

## பன்னீர் வெந்நீராகச் சுட்டது!

### தரு

65. சுகந்த கந்த பன்னீ ரென்னைச்
சுடச்சுட வெந்நீ ரிறைத்தார்
நிகழ்ந்த புஷ்பர் துளிநீ ரென்னை
நெருப்பினையோ பாயல் செய்தார்
முகந்து கொண்டு ...
மொழிவ மென்றே வசைபேசினார்
அகந்தை தோழி மார்கள்
அனைவரும் நல்லவ ராமே!

### வசனம்

"இப்படியாகப் பரவை நாச்சியார் கேவலம் நித்திரையில்லாமல் விரகதாபப்படுகிறதைத் தியாகராய சுவாமிகள் திருவுளத்தெண்ணி ஸ்தலத்தார் சொப்பனத்திலே யெழுந்தருளி, திருவாய் மலர்ந்த தெப்படி யென்றால்" (37)

## "இருவருக்கும் மணம் செய்து வையுங்கள்!"

### விருத்தம்

66. பனிமொழிப் பரவை யாரைப்
பரவுமா ரூர னார்க்குக்
கனிவினா லளித்தோம் நாமே
காதலாய் ஸ்தலத்தீர் நீங்கள்
நனிபெரு மகிழ்ச்சி பொங்க
நாளையே காலை தன்னில்
இனியநல் முகூர்த்தந் தன்னில்
இருவர்க்கு மணஞ்செய் வீரே!

## மணம் செய்வித்தார்கள்!
## விருத்தம்

67. காலமே யெழுந்தெல் லோரும்
கன்னிகை பரவை யாரைக்
கோலமே செயிது சைவக்
குறிசிலா ரூரர் தன்னைச்
சீலமா யலங் கரித்துத்
திவ்வியசன் னதியிற் றானே
ஞாலமே மகிழத் தெய்வ
நல்மணஞ் செய்வித் தாரே!

## வசனம்

"அந்தச் சமயத்திலே ஸ்வாமியார் அந்தர்தியானமாய் நின்று சொல்லுகிற வசன மெப்படி யென்றால்" (38)

## வாழ்த்து!
## விருத்தம்

68. பைம்புவி மகிழ விந்தப்
பரவையா ரூடனா ரூரரர்
இம்பரி போக மெல்லாம்
இனியனு பவித்து வாழி
நம்பெருந் தோழ னென்ன
நாமமு மளித்தோஞ் சந்திர
பிம்பமாய் மணக்கோ லம்போல்
வியப்புடன் திரிகு வாயே!

(நம்பெருந்தோழன் என்று சுந்தரருக்குப் பெயர் அளித்ததைப் பாடல் கூறுகிறது.)

## வசனம்

"இப்படியாக சுவாமியார் அனுக்கிரகத்தினாலே வேறே திவ்விய மான அரண்மனை அமைப்பித்து, அதிலே யிருந்து பரவையாருக்குஞ் சுந்தரரும் சகல யாக போக்கியங்களை மனுபவித்துக் கொண்டு வருகிற நாளிலே,ஒரு நாள் சுவாமியாரைச் சேவிக்க வருகிற விதமெப்படி யென்றால்" (39)

## திபதை

69. சங்கீத மேளம் பொங்கத்
தவளச் சங்குக ளார்ப்ப
இங்கித வீணை பாட
இன்னிசை பலவா சிப்ப.

திருநாவ லூரன் வந்தான்
சிவன்திருத் தோழன் வந்தான்
அருமைவன் தொண்டன் வந்தான்
ஆருரர் வந்தான் வந்தான்!

என்னவே சின்ன மூத
இருபுறங் கவரி வீச
மன்னிய அடப்பை கொண்டு
வரும்படி தொழும்பர் சொல்ல

கைக்கிடாய் குரங்கு
கவுதாரி கோழி
தக்க கிளைவாய் தத்தைமான்
கிளைகள் கொண்டுடன் வருக

குலவுமெய் ஞானப் பண்டிதர்
அநேகர் பரவியே வருக
இரத்தினக் குண்டலமு மாத்தின்
கங்கணமும் முத்துநீள் வடமும்

முப்புரி நூலும் பொன்னது நாணும்
பூஷணமுமே!
வைப்பு மின்னவே புனைந்து
வேடிக்கை யாக!

திருநீறு நெற்றித் திலதமும் ஒளிர
அரியசீர் பொன்னின் ஆடையுந் தரித்து
குலவுபொற் பாதக் குறடிமேல் நடந்து
விலகியே ராச வீதிகள் கடந்து

சன்னதி வீதி தனையெலாங் கடந்து
கொள்ளல்சீர் பெரிய கோபுரங் கடந்து
தேவர்கள் பரவுந் தேவாச் சரிய
காவணந் தனையுங் கடந்துவந் தனரே!

## வசனம்

"அந்தச் சமயத்திலே இப்படியாகச் சுந்தரர் வருகிறபோது, தேவராச்சரிய மண்டபத்திலே அடியார்கள் கூட்டத்திலே யிருந்த விறல் மிண்ட ரெழுந்து வருகிற விதமெப்படி யென்றால்" (40)

## விருத்தம்

70. மலைய நாமதனிற் கொற்ற
வளம்பெறு செங்கண் ணூரில்
குலவு வெள்ளாளர் தங்கள்
குலத்தில்வந் துதைய மானோர்

தலைமையாம் புகழ் நீறு
சாத்திய சைவ ரானோர்
தொண்டன் பிறவி
மிண்டர் வருகின் றாரே!

(விறன்மிண்ட நாயனார் பிறந்த ஊர் கேரளாவில் உள்ள கொல்லம் துறைமுகம் அருகே அமைந்த குன்னூர் ஆகும்.)

## விறல்மிண்ட நாயனார்!

### பதம்

71. எங்கள் சைவ விறல்மிண்ட ரெழுந்து வந்தனர்
திங்கள் வேணி சிவனார் பாதம் சிந்தைதனில் மறவாத
எங்கள் சைவ விறல்மிண்ட ரெழுந்து வந்தனர்!

ருத்திராட்ச மாலைபூண்டு உடம்பெல்லாம் நீறுபூசி
சித்திரவயி ராக்கியமாக சிவசமயப் பிசகிலாத

சீலமன்றிக் கோயில்புகுந் தீயர்தமைக் கொல்வேனென்று
காலஆலம் போலக் கையில் கண்ட கோடாலியைப் பற்றி
எங்கள் சைவ விறல்மிண்ட ரெழுந்து வந்தனர்!

### வசனம்

"இப்படியாக வந்த விறல் மிண்டர் சுந்தரரைத் துரத்திக் கொண்டு போகிற விதமெப்படியென்றால்" (41)

### தரு

72. சாலஅடி யார்தமையுஞ் சரணஞ் செயாமல்
சீலமொன் றிலாதமற் நீவிட னாகிச்
செல்கின்றாய் சுந்தரா சிவன்சலுகை யோகாதான்
கொல்கின்றேன் பாருன்னைக் குதிகாலைப் பிளந்தே

கண்டகோ டாலியு மென்கையு மறியாயோ
துண்டதுண்ட மாகவே துணியா யோநீ
சாம்பசிவ னார்தமக்குத் தந்தை யானாலும்
வீம்புனா லுன்னை விடுகிலே னானே!

### வசனம்

"இப்படியாகத் துரத்திப் போகிறபோது சுந்தரர் முறையிடுகிற-தெப்படி யென்றால்" (42)

## சுந்தரமூர்த்தி நாயனார் அலறல்!
## விருத்தம்

73. பரனே சிவனே முறையோ முறையோ
பரமேஸ் வரனே முறையோ முறையோ

அரனே அரனே முறையோ முறையோ
வலியாண் டவனே முறையோ முறையோ

கரமேல் மழுவைத் தரித்தாய் முறையோ
கண்டகோடாலி கையில் பற்றி

முரணாய்த் துணிப்பே னென்னவே வந்தான்
மூவர் முதல்வா முறையோ முறையோ?

## வசனம்

"இப்படியாக முறையிட்டுக் கொண்டடோடி கோவிலிலே புகுந்து கதவைச் சாத்திக் கொண்டபோது விறல் மிண்டர் போய்க் கதவையிடிக்க சுவாமியார் திருவாய் மலர்ந்த தெப்படியென்றால்"

(சுவாமியார் - சிவன்)

## தண்டிக்க வேண்டாம் என்று சிவன்கூறல்!
## விருத்தம்

74. சுந்தரன் வேறே யல்ல
சுயமிவ னாமே யாகும்
எந்தட விருந்தா லென்ன
எவ்விதம் வந்தா லென்ன?
நந்தமக் கின்ப மாகும்
நவில்விறல் மிண்டா நீயே!
வந்துதெண் டிப்ப தென்னோ?
மற்றினி ஏகு வாயே!

## வசனம்

"அந்த விசேஷத்தை விறல்மிண்டர் கேட்டுச் சொல்லிக் கொண்டு போகிற வித மெப்படியென்றால்" (44)

## விருத்தம்

75. ஏதிவை சொல்வ தெல்லாம்
என்தொண்டுக் கிடையூறாக
ஓதிய நாயன் கூட
ஊரனும் புறம்ப தாகும்!

நீதியில் லாத ஊரில்
நிற்கவும் ஒண்ணா தென்றும்
போதுவே னாரு சொல்லைப்
புலத்தையு மிதிக்கி லேனே!

## வசனம்

"இப்படியாக விறல்மிண்டர் போனபிறகு சுவாமியார் சுந்தரரைப் பார்த்து திருவாய் மலர்ந்த விதம் எப்படியென்றால்" (45)

## சந்த விருத்தம்

76. எல்லவர மஞ்சவரு விறல்மிண்ட நாயினார்
இருந்ததொன்று மறியாம லேமாறி நீயே

வல்லமைகொண் டாசார மில்லாம லிங்கே
வந்தனை கண்டவர் துரத்தி வந்தனை!

விலக்கிச்சொல் மொழியதனைச் சகியமாற்போனார்
சுந்தரரவர் கோபமகன் றிங்கு வரவே

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியோனே
திருத்தொண்டத் தொகையெடுத் தியம்புவாய் நீயே!

## வசனம்

"இப்படியாகத் சுவாமியார் சொல்லத் திருத்தொண்டர்தொகைபாடி யாரூரிலே தானே பரவையாருடனே கூடியிருந்து விளையாடுகிற நாளிலே நடக்கிற விதமெப்படி யென்றால்" (46)

## சுந்தரர் பயணம்
## திபதை

77. குண்டையூ ராரூர் கொற்றவ ரருளால்
குண்டையூர் நல்லூர் குன்றநெற் கொண்டு
வளவனார் தமதுமந்திரி கோட்டம் புவியார்
தளபதி நாட்டியத்தான்குடி நன்றி

மற்றவ ருதவு மகளிரோ ரிருவர்
பொற்றொடி யாரைப் புணர்வது விடுத்து
பொன்னின மாடைகளும் பூஷண வகையும்
பின்னுமே பொருளும் பெற்றுவந் தருளி

பங்குனி விழாவிற் பரவையா ரெவற்குஞ்
செங்கைகா ரெனவே தியாகமே தருக
தென்புக லூரிற் சிவன்செங்கல் தன்னை
அன்புடன் செம்பொன் னாக்கியே தருக

கொண்டுவந்த தருளி கொங்குநா டளவாய்
அண்டத்தம் பதிகள் அனைத்தையும் பரவித்
திருமுது குன்றிற் சென்றுதம் பெருமான்
அருளிய பன்னீ ராயிரம் பொன்னும்

மாற்றான் அருளால் மணிமுத்தா நதியில்
முத்துமே விடுத்து முதல்வா ரூரிற்
குளத்திலே யெடுத்து கொண்டுவந் தருளி
உளத்திலே பரவை யுகந்திட வியந்து

மற்றுமே வடக்காய் வருகின்ற நாளில்
கொற்றவெம் பெருமான் குருகாவூ ரருகில்
வந்துபந்த தலின்கீழ் மறையவ ராகி
புந்தியே மகிழ்வாய் பொதிசோறும் நீரும்

தந்திடப் பொசித்து தான்கழுக் குன்றில்
வந்தன ரருகில் வாழுங்கச் சூரில்
மேவிய போதில் விமலரந் தணராய்
தாவியோ டொன்றைத் தன்கையிற் கொண்டு

இரந்து வந்தனன் இடவுமே பொசித்து
பரந்தசீர் மகிழ்வாய் பதியெலாம் பரவி
வெற்றிசேர் குலத்தார் வியந்தெதிர் கொள்ள
ஒற்றியூர் தன்னி லுகந்துவந் தனரே!

## விருத்தம்

78. வந்துகோ புரத்து முன்னே
வணங்கினர் எழுந்து சென்று
சிந்தையின் மகிழ்வு கூற
திவ்வியசன் னிதியா வெய்தி

புந்தியா லுன்னிக் காயம்
புளகிக் கண்ணீர் வார
பைந்தமிழ் மாலை பாடி
பணிந்துவந் தனரே பாங்கே!

## வசனம்

"இப்படியாக சுந்தரர் ஸ்வாமியாரை சேவித்த பிறகு திருச்சுத்திலே திருப்பணி செய்யுற அடியார்களை துதிபண்ணிக் கொண்டு வருகிற விதம் எப்படியென்றால்" (47)

## “தொண்டர்களுக்குப் பணிசெய்வேன்!’
## சம்பை

79. திருவலகு மெழுகுபவர் திருப்பணியுந் திருமெழுக்குஞ்
செய்குவீ ருமைப்போற்றி உய்குவே னையா!
தூபமகிற் புகைசெய்து தீபவொளி செய்கின்ற
தொண்டர்கள் நுமக்கெல்லாந் தொண்டன்கா ணையா!

சந்தனமும் புனுகுசட்ட நதியிலமிர்தஞ் செய்தமத்திற்
தருகுவீர் உமையெலாம் பரவுவே னையா!
பலமலரும் வில்வமுதல் பறித்துவந்து மாலைசெய்து
பணிசெய்வீ ருமதேவற் பணிசெய்வே னையா!

## வசனம்

“இப்படியாக சேவித்துக் கொண்டு வருகிறபோது, மாலை மண்டபத்துக்குள் சங்கிலியார் மாலை போடுகிற விதமெப்படி யென்றால்” (48)

## சங்கிலியார் மாலை கட்டல்!
## சம்பை

80. பணமான ருத்ராக்ஷம் பசும்பொன்கண் டிகைதன்னை
கணவாளி பருவாளி காதுதனிற் புனைந்து

கெம்புமூக் குத்தியிட்டுத் திலகமிட்டு மயிர்முடித்து
செம்பொன் னாகிய மைற்றிரு நீறுசாத்தி

இக்குமணி முத்துமணி அணிபவள மணிவடமும்
ஒக்கவே மலைமீதி லூசல்நிக ராடப்

பட்டுடையு மெத்தாப்பும் பாடகமும் பதிபுரமும்
கட்டழகி வீசுசெங்கை கடகவளை யொளிர

அருவமதன் கருப்பு வில்லின்
அலர்வரளி தனைத்தொடுக்கப்
புருவவில்லின் மைக்கண்டு பூவரளி தொடுத்து

நெஞ்சுதனி லஞ்செழுத்தை நெகிழாமலே யன்றி
வஞ்சிசங் கிலிகையில் மாலை தொடுத்தனளே!

## வசனம்

"இப்படிப்பட்ட சங்கிலியைப் பார்த்த சுந்தரர் தம்முட மனசுடனே சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (49)

## தரு

81. மாசுசூழ் சந்திர னென்ன வேதிரை
மறைவில் இருந்தவள் இவளாரோ?

அலரோன் றெடுத்திவள் தொடுக்கவே
மலரைத் தொடுத்தே மதன்தொடுக்கிறான்

தொடுக்கவே தொடுக்கவே மலரெல்-லாமனந்
திடுக்கு திடுக்கென்ன யாகுதே!

பரவையல்லா நிலையெனு மெனக்காண
திருவரு ளிதுவென்ன வந்ததே!

## வசனம்

" அந்தச் சமயத்திலே சுந்தரரைச் சங்கிலியார் பார்த்து, தன் மனதுடனே சொல்லுகிற வசன மெப்படி யென்றால்," (50)

## குறுந்தாழிசை

82. இதுவரைக்கு மொருவருக்கு மிடங்கொடா மனந்தனில்
புதியவரிவ ரார்வந்து புக்கினார் எதுக்கோ?

பண்டுசொன்ன சொற்படிக்கி பரமரிவ ரைத்தனியே
கொண்டுவந்து விட்டுவிடுவர் காட்டஞ் செய்தனரோ?

ஏதொன்றும் நானறியேன் இடைதுயிலும் நெகிழுதுகாண்
சூதென்று முலைபசலை சூழ்ந்தவளை கழலுதுகாண்!

குளிர்தென்றல் தீயாய்க் கொதித்துவரு தீதல்லாற்
றெளிந்தமனமும் மயிலிற் சிக்கினதென் செய்வேனே?

## வசனம்

"அந்தச் சமயத்திலே சுந்தரரிவளாரென்று கேட்க விப்ரவக்கிரன் விசாரிச்சு வந்து சொல்லுகிற வசன மெப்படி யென்றால்"

## விருத்தம்

83. நாரணு மரபில் மரபால் நாயன்
கேழ்வ னல்கும் பாவை
மாயவிழிச் சங்கிலியார் தன்கு லத்தில்
ஒருவரையும் அவரையே னென்று

மெய்சிவன் கருணையினாற் கன்னிமா டத்தில்
வைகி மின்னார் சூழ
எய்திருச் சன்னதியிற் திருப்பணிகள் செய்து
தொழுதி ருக்கின் றாளே!

(நாரணுமரபு - பூக்கட்டும் மரபு)

## வசனம்

"இந்த விசேஷம் கேட்டு, சுந்தரரொருவிடத்திலே யிருந்து விரகதாபம் படுகிற விதமெப்படி யென்றால்" (52)

## அடதாளம்

84. அந்தச் சங்கிலி லாடச் சங்கிலி
ஆசை பூட்டி மனதினைப்
பந்தித்தே யிருக்கின்ற சங்கிலிப் பரவையர்
நானேது செய்திட மையற் சங்கிலி

இரண்டு தாள்களினும் புறம்போதி டாமலே
இருப்புச் சங்கிலி போது தாச்சு!
அய்யய்யோ வெகுசங்கிலி துறடானபடியே மயங்கியே
மெய்யிலே மந்தமாருதத் தழல்வீச லானேன்!

## வசனம்

"பிள்ளை யெழுந்திருந்து சன்னதியிலேபோய் சுவாமியாருடனே விண்ணப்பம் பண்ணிக் கொள்கிற விதமெப்படி யென்றால்"
(53)

## விருத்தம்

85. பரவை மின்னாள் தருமாசைப்
பரவையிலே மூழ்கியது பத்தா தன்றோ?

புரவலர்கண் சங்கிலியார் காதலைச்
சங்கிலிச் சிக்குப் போட்டா னய்யா!

பரசிவனே மையல் கொண்ட
பரிதாபந் தனைப்பார்த்துப் பரவை யாரைத்
தரவேணு மினியுனது
பாதார விந்தத்திற் சரணஞ்செய் வேனே!

## வசனம்

" இப்படியாகச் சுந்தரர் சொல்ல, ஸ்வாமியார் பழைய விருத்தப் பிராமணர்போல வந்து சொல்லுகிற வசனமெப்படியென்றால்,"
(54)

## விருத்தம்

86. வருந்திட வேண்டாங் கேளாய்
வன்தொண்டா அவளைச் சேர்தல்
அருந்தல மானா லுந்தான்
ஆயிர நயங்கள் பேசி

திருந்தவே செய்து நாளை
திருமண முடிப்பேன் கண்டாய்!

இருந்தல்லோ படுக்க வேணும்
இனிக்கணத் தாளு வாயே!

## வசனம்

" அந்தச் சமயத்திலே ராத்திரி வருகிற விதமெப்படி யென்றால்"

(55)

## திபதை

87. இப்படிச் சொல்லியெங்கள் ஈசனு மறைந்து போக
அப்படியே தானந்த ஆதவன் மறைந்து போக

நாயகன் போனானென்று நளினங்கள் கதவ டைப்ப
மேயசெங் குமுதமெல்லாம் வீடுகள் திறந்து கொள்ள

மாலையம் பொழுதுமாயச் செவ்வானமு மேற்கே தோன்ற
வேளையி லிடைவி டாமல் விளங்குசெம் பதுமமென்ன

பரவிய விருளிலெங்கும் பலபல தீபஞ் தோன்றக்
குருகுகள் கோடுகோடாய் கூண்டினி லளடந்து வாழ்கச்

சுந்தரர் தனியுந்தாமுந் துலைவிலாக் கங்குல் தன்னில்
தந்திர மதனனூடே சண்டைகொண் டலைந்து நிற்கச்

சங்கிலி யென்னுநங்கை தனித்திரு இருவென் றோது
மங்கையைத் தூறித்தூறி வைதுகொண் டிருக்கும் போது

நித்திரை யென்னுநங்கை நினைவினில் கருணை கூர்ந்து
பத்திவிழியாள்தானும் படுத்தனள் பாயின் மீதே!

## வசனம்

"அந்தச்சமயத்திலே சங்கிலியார் சொப்பனத்திலே ஸ்வாமியார் வந்து சொல்லுகிற வசனமெப்படியென்றால்" (56)

## விருத்தம்

88. முந்தவே யுனக்கு நாமே
மொழிந்தசொற் படியே யந்த
சுந்தரன் வந்தா னுன்னைச்
சுயமதாய் மனைவி யாகத்
தந்திட வேணு மென்றான்
தந்தனம் நாமே பெண்ணே
சிந்தையே மகிழ்வு கூரத்
திருமணம் புரிகு வாயே!

## வசனம்

"இப்படியாகச் சுவாமியார் சொல்லக் கேட்டுச் சங்கிலியார் சொல்லுகிற வசனமெப்படி யென்றால்" (57)

## விருத்தம்

89. சென்னிமிசைப் பிறையணியும் நாதா உந்தன்
திருவுளத்துக் கேற்படி யல்லால் வேறே
என்னிடயிச் சையுமுளதோ வாணா லுந்தான்
இனியவர்தா னென்னைவிட் டகன்று போந்து
பொன்னுலகில் திருவாரூர்ப் பரவை யாரைப்
புணர்வதற்குப் போகோனென் றுண்மையாக
சன்னதிமுன் வந்துநின்று சொன்னா ராகில்
சம்மதியா மனமெனக்குத் தரிக்குந் தானே!

## வசனம்

" அந்தச் சமயத்திலே சங்கிலியார் சொன்ன வார்த்தையைக் கேட்டு,விருத்தப் பிராமணர் போலே வந்து சுந்தரருடனே சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (58)

## சிவன் சொன்னது

"திருவுடைச் சுந்தரா! எந்தன் தோழனே எனைத் தூதனுப்பினை; ஏகி நானுமே அந்த மாதினை இரந்து பிரியமனேகஞ் சொல்லி மனது

சம்மதியாகவே செய்த வருத்த மெத்தனை யென்று சொல்லுவேன்? அனகனே அவள் சொல்ல வாய் மொழி பறையக் கேளாய்! என்னை விட்டினி, பரவைப் பக்கலி லேகேனெனக் கோயில் சன்னதி தன்னில் நின்றுன்னைச் சொல்லச் சொல்லினள் சதுரியவளே" (59)

## வசனம்

"இப்படியாகச் சுவாமியார் சொன்னது கேட்டுச் சுந்தரர் சொல்லுகிற வசன மெப்படியென்றால்" (60)

## அர்த்தசந்திரிகை

90. நெஞ்சுதனை மாலையுட னேகொண்டு பிணித்தார்
பிணித்தவுட னேகாமப் பிரமையாகச் செய்தார்
செய்யுமவள் யென்சொலினுஞ் சொல்லவே வேணும்
வேணுமென்று சன்னதிமுன் விளம்பியிடும் போது
போதவே கோவில்தனில் பொருந்தியங் கிராதே!

## வசனம்

"இப்படியாகச்சுந்தரர் சொன்னவுடனே அந்தப்படி யாகுதென்று சங்கிலியார் சொப்பனத்திலே சுவாமியார் திரும்பிவந்து சொல்லுகிற வசனமெப்படியென்றால்," (61)

## விருத்தம்

91. சங்கிலி யாரே நீதான்
சாற்றிய வசன மெல்லாம்
அங்கவன் இசையச் சொன்னேன்
அவன்சபதம் சொல்லும் போது
தங்கிய கோயில் விட்டுத்
தருமகி ழடியின் கீழே
இங்கிதத் திருப்பா யென்றான்
இவையறிந் திருப்பாய் நீயே!

(தருமகிழடி - மகிழ மரத்தின்கீழே)

## வசனம்

"இப்படியாகச் சங்கிலியார் சொப்பனங் கண்டெழுந்திருந்து பாங்கியை யெழுப்பிச் சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (62)

## தரு

92. தோழியே நானிப் போது
சொப்பனங் கண்டது கேளாய்
ஆழியனு மயனுங் காணா
அந்தணர் வந்தனர் கண்டாய்

வந்துநின்ற தமது தோழர்
வருந்தியென்னை வேணு மென்ன
தந்தமை யிரக்கத் தாமும்
சம்மதியாந் தருவ மென்றே

சொன்னதிந்தப் படிகா ணுந்தான்
சுயபுத்தி யேதென்று கேட்க
என்னிச்சை யோகசுவாமி யுந்தன்
இருதயப் படியென்று சொல்லி

இன்னமு மொன்றுண் டென்று
என்னைவிட் டாரூர்க் கேகாமல்
சன்னதிமுன் வந்து சொன்னால்
சம்மதியா மென்று சொன்னேன்

சொன்னபொழு தந்தப் பேச்சைக்
சொல்லியவன் சொன்ன பேச்சை
என்னருகில் மீணடு வந்து
எனக்குச்சொல் லுந்திறம் கேளாய்!

சம்மதியா யீசனுக் கவர்சபதம்
சொல்லும் வேளை தன்னிற்
றம்மையந்த மகிழ டிக்கே
தனித்தி ருக்கச் சொல்லினராம்

இந்தஅந்த ரங்கப் பேச்சை
எனக்குரைத்தா ரென்ன எண்ணி
எந்தை யீசனார் சொன்னதை
என்னவென்று நான் சொல்லுவேன்?

### வசனம்

“தோழி யிதனைக்கேட்டு ஆச்சரியப்பட்டுச் சங்கிலியாருடனே சொல்லுகிற வசனமெப்படி யென்றால்”

## தோழி சங்கிலிக்குக் கூறுதல்!

“பூமன்... பழம் புத்தூரில் வலிய ஆட்கொள்ளுந் தமது தொழும்பன் தனக்கின்று சந்து நடந்துனை யிளக்க யிருக்கார்; கனவிலெழுந்தருளி வந்த கணக்கதனை யென்னாலே கணக்கிடலாமோ? அதுதானும் போகட்டு மவர் சொன்ன மொழியையிது. காணென் றுனக்குரைத்த யியல்பை யென்ன சொல்லுவேன்? கர்த்தர் திருவிளையாட்டைக்கடையேன் நாயே னெத்தனை யென்று ஆச்சரிய மியம்புவேன் பெண்ணே? (64)

### வசனம்

“ இப்படியாக ஆச்சரியப்பட்டுக் கொண்டு இருக்கிற வேளையிலே விடியநேரம் வந்து தோழிமாரும் சங்கிலியாரும் பு பங் கொய்து வரப் போகிறபோது சுந்தரர் சன்னதிக் கெதிராக வந்து சொல்லுகிற வசனமெப்படி யென்றால்,” (65)

### பதம்

93. போகாதேநீ நில்லடி பெண்ணே! - ஒரு
புத்தி யீதேன்? சொல்லடி!
தோகாய் இப்போது சுவாமியாருடனே - சொன்ன
வாகான சொல்படி வந்துநான் சொல்வேன் காண்!
(போகாதே)

ஏதுநீ தயவில்லையோ? - பெண்ணே
மையல் இருவருக்குஞ் சரியல்லவோ?
காதாருங் கூர்விழிக் கணையையென் மேல்விட்டு
வாகான சொற்படி வந்துநான் சொல்வேன்காண்
(போகாதே)

சன்னதி யிதுதாண்டி பெண்ணே! சொல்லுஞ்
சபதஞ் சொல்வேன் நானடி!
மன்னனை செய்தென்னை மையல்தீரச் செய்தாலுன்
பின்னே திரிந்து பிழைக்கிறேன் பெண்மானே!
(போகாதே)

## வசனம்

"இப்படியாகச் சுந்தரர் குறையிரந்து சொல்லுகிறபோது சங்கிலியாருக்கு நாணம் வந்து தோழிமார் கூட்டத்திலே புகுந்து ஒதுங்கிப் போகையில் அந்த சுந்தரருடனே தலையான தோழி சொல்லுகிற வசன மெப்படி யென்றால்," (66)

94. நீர்திருவாய் மலர்ந்தமொழி
நீபற்றியிந்த நேரத்திலே
சீர்திருவாய் கோயில்தனில்
தரித்திருக்க வில்லையன்றோ?
ஆனதினால் சுவாமியெங்கும்
அமர்ந்திருப்பர் எனவெண்ணி
சீதமலர் மகிழடியில்
திருமுன்பு சொல்வீரே!

## வசனம்

"இப்படியாகத் தோழி சொன்ன வசனத்தைக் கேட்டுச் சுந்தரரப்படியே யாகுதென்று சொல்லி மகிழமரத்தின் கீழே வந்து சொல்லுகிற வசனம் எப்படி யென்றால்," (67)

95. மகிழடி முக்கால்
வலஞ்செய்து பணிந்து சிந்தை
நெகிழவே சுவாமி யாரை
நினைந்துநெக் குருகிக் கையை
முகிழ்செய்தே யினிநா னாரூர்
முகங்கொண்டு செல்லே னென்ன
புகழ்பெறச் சொன்னே னைந்து
பூதமுஞ் சாட்சி தானே!

## வசனம்

'இப்படியாகச் சுந்தரர் சபதம் செய்த பிறகு சங்கிலியாருந் தோழிமாருந் மெப்போதும் போலே புட்பமெடுத்து வந்த பின்பு ராத்திரியே ஸ்தானத்தார் சொப்பனத்திலே சொன்னபடிக்கு இருவருக்கும் கலியாணம் பண்ணுகிற விதமெப்படி யென்றால்," (68)

96. சன்னதி திருமுன் பாகச்
சங்கிலி தன்னை நாவல்
மன்னனைப் பீட மேற்றி
மறைச்சடங் கெல்லாஞ் செய்து
பொன்னுல கிற்பூ மாரி
பொழிந்திட மேளம் பொங்கச்
சின்னமார்ப் பரிக்கத் தெய்வத்
திருமணஞ் செய்வித் தாரே!

## வசனம்

"இப்படியாகக் கலியாணமான பிறகு நடக்கிற விதமெப்படி யென்றால்," (69)

## கலவித்தரு

97. பூசிநிலாக் காயத் தென்றற் காற்று
வீசச் சலவைப் பந்தல் தன்னில்

நின்றுசரச சல்லாபஞ் செய்வர் கூடமதில்
நின்றுகிள்ளை கொஞ்சு முத்தமொழி கேட்பர்!

மாடமேறிப் பூவணைமேல் மதனகேளி
கூடிவாழ் யானவன் மலரையொரு

வேளையிற் கொய்துவந்து தேத்தி தேத்தி
மாலைசெய்து சிவன்பாத தத்திற் சாத்தி

வைப்பதொரு வேளையில் சூதாடுவரொரு வேளையில்
இசைப்பாரொரு வேளையில் புட்பங்கள் புனைவர்

பிணங்கு வார்கள் இணங்கு வார்கள் பின்னையுமே
இணங்குவார்கள் கணந்தனிலு மிடைவிடாமற்
கலந்துவிளை யாடுவரே!

## விருத்தம்

98. ஆயதோர் கூடல் தன்னில்
அநேகநாள் நிமிஷ மாகி
நேயமாய் ஊடல் தன்னில்
நிமிஷமோ ரூழி யாகிக்
காயங்கண் மூக்கு நாக்கு
காதினுட் புலன்க ளைந்து
ஏயவே மகிழ்வு கூற
இன்பங்கொண் டிருக்கின் றாரே!

## வசனம்

“இப்படியாகச் சங்கிலியாரும் சுந்தரரும் போக போக்கியம் அனுபவித்துக் கொண்டிருக்கிற நாளிலே ஒரு நாள் திருவாரூரை நினைந்து கொண்டு சொல்லுகிற வசனமெப்படி யென்றால்,” (70)

## பதம்

99. காண்ப தென்றுகாண்? - ஆரூரைக்
காண்ப தென்றுகாண்?
காண்ப தென்றினித் தீர்த்தகம லாலயத்தையும்
பூம்பெரும் புத்திடம் பூங்கோயில் தன்னையும்! (காண்ப)

பார்ப்ப தென்று காண்? - ஆரூரைப்
பார்ப் தென்று காண்?
பார்ப்ப தென்றினித் தேரும் பங்குனித் திருநாளும்
ஆர்ப்பந்தோர் மேளமு மலங்கார மானதையும் (பார்ப்ப)

## சுந்தரமூர்த்தி நாயனாருக்கு கண் குருடானது வசனம்

"இப்படியாக நினைத்துக் கொண்டு திருவாரூருக்குப் போகவேணு மென்றெண்ணிச் சுவாமியாரைச் சேவித்துத் தனியே புறப்பட்டுப் போகையில் திருவொற்றியூரெல்லை தாண்டியவுடனே கண் தெரியாமல் போய்ச் சொல்லுகிற வசன மெப்படியென்றால்,"
(71)

## ஆகிரி இராகம்

100. சிவசிவா ஏதுசெய்வேன்?
தீவினையென் கண்ணொளியை
அவமாகியோர் படலத்தால்
மறைத்த தென்னமோ?

ஆயிரம்பொய் சொல்லியொரு
ஆயிழையை மணம்புரிதல்
நியாயமென நானிலத்தில்
நவிலுவதும் பொய்போகா!

ஆதலினாற் சங்கிலிக்காய்
அறைந்த பொய்யைச் சகியாமல்
நீதியில்லாத படியென்னை
நேசம்வைத்துக் காத்திடையா!

பேணியுனக்கு நாசம்
பிழைசெய்தே னாகிலுங்கைக(கு)
ஊனுகோலா னாலும்
உதவையா யிப்பொழுதே!

## வசனம்

"இப்படியாகப் புலம்பிக்கொண்டு காலாலே வழி தடவிக் கொண்டு போகிறபோது சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (72)

## ஓடத்தரு

101. அந்தகர்க் கந்தக ரிடத்திற் பிழைசெய்து
அந்தகன் நானென வந்திடுவீர் போயிடுவீர்
வழிகாட்டீர் குருடனெனைக் கையில் கோலூன்றித்
தனியோனென வருகின்றீர் வழிகாட்டீர் வழிகாட்டீர்

## கோல் பெற்றார்!
## விருத்தம்

102. இப்படி யாகப் பேசி
இரங்கியே தளர்ந்து சென்று
மைப்படி கண்ட முல்லை
வள்ளலைப் பணிந்து போற்றி

மெய்ப்படி வெண்பாக் கத்தில்
விமலனார் இரங்கித் தந்த
கைப்பிடி யூன்று கோலுங்
கைக்கொண்டு நடக்கின் றாரே!

## வசனம்

"இப்படியாக வரச்சே பரிசனங்க ளெல்லோருங் கூடியப்பாற் போகிற வித மெப்படி யென்றால்," (73)

## கண் திரும்ப வந்தது!
## திபதை

103. பழையனூர்ப் பணிந்து பணிமதி சடையார்
தலைத்திரு வூரல் தன்னையும் பரவி

காஞ்சிமா நகரிற் கம்பர்தம் மருளால்
வாஞ்சையா யிடக்கண் வரம்பெற் றுகந்து

மற்றுள பதியும் வணங்கியே பரவி
வெற்றிபூந் துருத்தியில் மெய்ப்பிணி தீர்ந்து

சிந்தையே மகிழ்ந்து சிவன்பதம் பணிந்து
அந்தியம் போதில் ஆரூர் புகுந்து

புற்றிடங் கொண்ட புனிதரைப் பணிந்து
மற்றொரு கண்ணும் வரமகிழ் வாகி

சன்னதி விடுத்தே தனியொரு புறத்தில்
மென்னகை யுடனே வீற்றிருந் தனரே!

### வசனம்

"இப்படியாக இருக்கிறபோது வேறு சென்மங்களாச்சுது; இனி இவரார்ரோ நானாரோ காண்" (74)

104. இது என்ன சொல்கிறீர் இந்த சென்மந்தனில்
இனிமுகம் பார்ப்ப துளதோ?

வருவாரென்ன, எப்பொழுதும் வழிபார்த்துப் பார்த்து
ஒரு வாசல் குடியாகியே உருகி நிலாவெறி
நெருப்பு ராத்திரிகள் எத்தனையோ கழிந்தன ஐயகோ!
(இது என்ன)

குறிகள் எத்தனை? குணமான எத்தனை?- மணற்
கூடல் எத்தனை பார்த்து
எரிமழைப் பருவமும் இளவேனிலும் கடந்து
எரியுது சொல்வசமோ? (இது என்ன)

பாவையென்னைப் பார்வை பண்ணாமலே - சங்கிலி
பார்க்கும் பார்வை சங்கிலிச் சிக்கிலே
இரவுபகல் சிக்கினா ரென்றநாள் முதல்மணத்(து)
இருப்புச் சங்கிலி இட்டனள்! (இது என்ன)

## வெண்பா

105. இத்திறங்காண் சான்றோரே இன்னமுநீர் பேசினக்கால்
மெய்த்திறந்தால் ஆவி விடுவேன்காண் - அத்திறத்தால்
மாறாமல் என்னை மனச்சிலுகு பண்ணியென்றுங்
கூறாமலே சொல்லுங் கோள்!

## வசனம்

"இப்படியாகப் பரவை திருவாய் மொழி கேட்டு மருவுத்தரஞ் சொல்லவஞ்சி போகிற போது சுந்தரர் தம்மிலேதாம் சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (75)

## பதம்

106. இன்னும் வரயில்லை தூதுக்குப் போனவர்
ஏதுசெய்வேன் மனமே? - அவர்
முன்னமே போயினர் இந்நேரம் வீதி
முகப்பினுக் கெய்து வரோ? (இன்னும்)

வாசல் தலைப்பினில் போம்போது தாதிகள்
வரவேண்டாம் எனச்சொல்வரோ? - இவர்
பூசுரர் என்ன விடுத்தாலு மப்பாற்
போய்மின்னைக் கண்டனரோ? (இன்னம்)

பெரியவ ரிவாரென்ன இதக்கத்தி னாலொரு
பேச்சுத்தாஞ் சொல்வளோ? அந்தக்
கரியபூங் குழழ்மாது முனியுமோ? மகிழுமோ?
கருத்தென்ன கருத்தென்ன மாய்ந்ததோ?

## வசனம்

"இப்படியாகச் சுந்தரர் தம்மிலே தாம் சொல்லிக்கொண்டிருக்கிற போது தூதுக்குப் போன பெரியவர்கள் சுந்தரருடனே சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (76)

## விருத்தம்

107. அய்யகோ நாங்கள் தூதுக்(கு)
அணுகிய வயணம் சொல்வோம்
தையலார் வயிற்றி லெங்கள்
தலைதனை வைத்திட் டாலும்

கைதனைப் பிடித்தே யீது
காலெனச் சொல்லி னாலும்
வெய்யசொற் புகல்வ தல்லால்
வேறில்லை வந்திட் டோமே!

## வசனம்

"இப்படியாக வந்து சொன்ன வசனங் கேட்டுச் சுந்தரர் சுவாமியாரை நினைந்து சொல்லுகிற வசன மெப்படி யென்றால்," (77)

## திரிபங்கிஷம்

108. சுத்த மானவர் தாமும் நீரே - எந்தன்
தோழ னானவர் தாமும் நீரே
ஆன படியா லொன்று முமையே - அன்றி
ஆதரிப் பாரெவர் களேஉ மையே
இன்று பரவை கூட்டி னீரே - எந்தன்
இருதய வேணதுயர் நீக்கு வீரே!

## வசனம்

"இப்படியாகச் சுந்தரரும் பரிதாபப்படுகிறபோது சுவாமியார் வந்து சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (78)

## விருத்தம்

109. ஆருயிர்த் தோழா நீயே
ஆசைகொண் டலைந்து மாரன்
போருயற் வாளி பட்டுப்
புலம்பிட வேண்டாங் கண்மாய்
வாருயர் முலையி னாளை
வருந்தியே முன்பு நீக்கிச்
சீருயர் மகிழ்வாய் நின்னைச்
சேரநாம் செய்கு வோமே!

(மாரன் - மன்மதன், வாளி - அம்பு)

## வசனம்

"இப்படியாகச் சுந்தரருடனே சொல்லி, பூசை பண்ணுகிற குருக்கள் போலே வடிவெடுத்துப் பரவையார் வீட்டுக்குப் போகிற விதமெப்படியென்றால்," (79)

## தரு

110. காயமெல்லாம் நீறு பூசிக்
காஷாய வேஷ்டி போர்த்து
தூயருத்தி ராட்ச மார்புந்
துவளு முன்னாலுங்
காதினிற் பொற்குழை மின்ன
கவ்னமாகிப் பறவைவாழுங்
கோதிலாத மனைக்குப் பூசை
குருக்கள் போகின்றார்!

## வசனம்

"இப்படியாகப் போய்,பரவையார் வாசலிலே போய்க் கடைதிறப்புச் சொல்லுகிற வசனமெப்படியென்றால்," (80)

## குறுந்தாழிசை

111. அரவா பரணர் திருத்தோழ ராசைத்
துணைவ ரெனவந்து
பரவாய் பரவாய் ஓகோ பைம்பொற்
கபாடந் திறமினோ!
கரவா மனத்தா ரூரர் கணவீ ரெனவந்த காதற்
பரவாய் பரவா யோகோ பைம்பொற்
கபாடந் திறமினோர்!

## வசனம்

"இப்படியாக அழைத்தபோது, பரவையார் தாமே எதிர் கொண்டழைத்துப் போய்ப் பொற்பீடத்தின்மீது யெழுந்தருளப் பண்ணிஒழுக்கத்துடனே சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (81)

## தரு

112. அங்கணிருந் தெழுந்தருளி
அபூர்வமா யிரவுதன்னில்
இங்கு வந்தகாரியத்தை
இயம்புவீர் இயம்புவீரே!

பாதியிர லாகியெங்கும்
பனிமடங்க லானபின்பு
நீதியோகா ணீர்வருக
நிகழ்த்துவீர் நிகழ்த்துவீரே!

## வசனம்

"அந்த வசனத்தைக் கேட்டுக் குருக்கள் சொல்லுகிற வசன மெப்படியென்றால்," (82)

## ஓடத்தரு

113. அனமிசைந்த நடையாரே
ஆருரர் துணைவியாரே
மனமிசைந்து கொள்வோ
மெனில்ஒன்று சொல்வேன்

சொல்லாத பேச்செல்லாம்
சுயமுனக்கா கிப்போச்சே
நல்லாய்நீ தள்ளாமல்
நம்மனுவைக் கேட்பாயே!

## வசனம்

“பரவையார் சொல்லுகிற வசனம் எப்படி யென்றால்,” (83)

## ஓடத்தரு

114. நடைநடந்து கால்கள்தேய்ந்து
நங்கையுடன் பேசிப்பேசி
முடியநாவும் வாயுமெல்லாம்
முட்டைபோல் உலர்ந்துதையோ

வேண்டிவேண்டிக் கைகள் தானும்
மெத்தவுமே நொந்துதையோ
ஈண்டியென்ன செய்துநின்றாலும்
இணங்கிலைகாண் என்செய்வேனே!

## விருத்தம்

115. என்செய்வேன் எனது தோழா
இரந்திரந் தினிது பேசி
பின்செய்து மருங்கு லாளை
வேண்டியெப் படிச்சொன் னாலும்

முன்செய்த பிழையை யெண்ணி
முனிவது நீங்கி டாமல்
தன்செயல் தானெண் ணாமல்
தள்ளினாள் எனையுந் தானே!

## வசனம்

"சுவாமியார் சொன்ன வசனங் கேட்டு தளர்ச்சியுடனே சொல்லு கிற வசனமெப்படி யென்றால்," (84)

## பதம்

116. ஏது செய்வேன் சிவனே? - நான் ஏது செய்குவேன்?
ஏது செய்வேனினி எவரைத் தூதேவியுங்
காதலின் வேலைக் கரைசேர்வே னையோ? (ஏது)

உன்னாலேஆகா தொருவரா லாகுமோ?
என்னாவி பின்னு யிருக்குமோ சொல்லையா? (ஏது)

## விருத்தம்

117. வங்கணக் காரா கேளாய்
வருந்திநீ இருக்க வேண்டாம்
நங்கணம் பரவை யாரை
நயந்திரந் தினிது பேசி

செங்கண்ணு முனிவை நீக்கி
சேர்ந்துன்னைக் கூடச் செய்து
இங்கணோர் கணத்தி லெய்தி
இருந்துனை அனுப்பு வேனே!

## வசனம்

"இப்படியாக சுந்தரருடனே சொல்லி சுவாமியார் தூதுக்குப் போகிற விதமெப்படி யென்றால்," (85)

## விருத்தம்

118. அப்பொழு தரனார் தாமும்
அதிசய வடிவு மாகி
மைப்படி கண்டந் தோன்ற
மான்மழு கரத்தி லேந்தி

மெய்ப்பறை கங்கை வைத்தே
வேணியும் நீற்றும் பூச்சும்
ஒப்பிலா யிரவி கோடி
ஒளிர்தர வருகின் றாரே!

## பதம்

119. தூதுக்குவந்தனர் காண்! - சுந்தரரே
தூதுக்கு வந்தனர்காண்!
தூதுக்கின்றே மணிவீதி குளிரவொரு
பாதிக்கு ளகரர்தொழு மாதிக்கச் சிவனார் (தூதுக்)

துந்துமி வாத்திமி திந்தியம் திமியென்ன
சந்திரா தித்தர்கள் பந்தம் பிடிக்கவே!
சுரர்சொரி பூமழை தரையெங்கும் நிறையவே
வரமுனி வோர்தொழப் பரவையார் மனைக்கு (தூதுக்)

## வசனம்

"இப்படியாக, சுவாமியார் வரச்சே பரவையார் எதிர்கொண்டு வந்து போற்றுகிற விதமெப்படி யென்றால்," (86)

## பதம்

120. சங்கரா சதுர்வேத நாதா
சதாசிவா பரமேசுவரா!
பொங்கார வணிபூஷணா - சிவ
ரங்கவா தெய்வ நாயகா?

போற்றி போற்றி போற்றி!
நிர்க்குண நீலகண்டாபோற்றி!
பார்வதி பிராண வல்லப போற்றி
தாண்டவ பாத பங்க போற்றி
சந்திர சடாதரா போற்றி போற்றி

## வசனம்

"இப்படியாகப் போற்றி செய்து பின்னையுஞ் சொல்லுகிறவசன மெப்படியென்றால்," (89)

## தரு

121. என்னையொரு பொருளாகிச் சிவனே! - இங்கண்
எழுந்தருளி வந்தென்ன சிவனே?
முன்னும் வந்தது நீயோ சிவனே?முடிய
மூடினா னறியேனே சிவனே!

தனிமை செய்தா ராரூரர் சிவனே!அந்த
சங்கிலி சிக்கானார் சிவனே!
இனியேது செய்யநான் சிவனே - எனக்(கு)
இதுபுத்தி என்சொல்வாய் சிவனே!

## வசனம்

"இப்படியாகப் பரவையார் சொன்ன வசனங்கேட்டு, சுவாமியார் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்," (88)

## விருத்தம்

122. அந்தரம் அறிமுன் னீரே
அகிலமு மறிய நின்பால்
சுந்தரர் பரவை யாரே
தூதுவந் தனனாங் கண்டாய்

இந்திர போக மாக
எமதுயிர்த் தோழ னாரை
மந்தர முலைக ளார
மணந்துநீ வாழ்கு வாயே!

## வசனம்

"இப்படியாகச் சுவாமியார் சொல்லக் கேட்டு, பரவையார் சொல்லுகிறவசனம்யெப்படியென்றால்," (90)

## விருத்தம்

123. சுந்தரன் தொண்டன் நானே
தொழும்பனீ யாண்ட வள்ளல்
எந்தனிச் சையுமொன் றுண்டோ
எப்படி திருவுள் ளத்திற்

சிந்தித மாச்சோ வந்த
சொற்படி செய்வே னையா
நந்தமை யானார் தெய்வ
நாயகி பாக னாரே!

## வசனம்

"இப்படியாகச் சொல்லிவந்து சுந்தரேசனே சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (90)

## விருத்தம்

124. அனநடைப் பரவை யாரை
அனேகமா யிரந்து விஞ்சி
மனமுனி வாற்றி நின்னை
மணந்திடச் செய்தேன் கண்போல்

இனமொரு குறைவில் லாமல்
இக்கண மேகி யொன்றால்
தனகியே யவளைத் தோளைத்
தழுவியே வாழ்கு வாயே!

## வசனம்

“இப்படியாக சுவாமியார் சொன்ன வசனங்கேட்டு சுந்தரர் போய்ப் பரவையுடனே கூடி கலவியின்பம் மகிழ்ந்து சொல்லுகிற வசனமெப்படி யென்றால்,” (91)

## ஏலப்பதம்

125. மெய்ப்படிக்குப் போனாரை வியந்ததோழ னென்பதல்லால்
இப்படிநீ தூது சென்றாயோ? ஓதியாகராயா!
இப்படி நீ தூது சென்றாயோ?

சந்திரனுதல் பரவையாரைத்
தழுவியேக போகமாகி
இந்திரபோகம் போலிருந்தேனே!
ஓதியா சுராயா!

## வசனம்

“இப்படியாக சரசசல்லாபத்துடனே இருக்கிற நாளிலே நடக்கிற வித மெப்படி யென்றால்,” (92)

## திபதை

126. தோகைபா லரனைத் தூதினுக் கனுப்பு
மோகனை எனது முன்னிலை காண்கில்

வடிசுடர் வாளால் வகிர்வகி ராகத்
தடிகுவே னென்ன சபதங்கொண் டிருந்த

ஏயர் கோன்கலிக் காமரென் போரை
நேயமா யிணக்கும் நினைவுகொண் டரனார்

மிக்கசூ சூலையினை விருக்கமற் றதனைத்
தொக்கவே நீக்கித் தோழமை செய்து

அன்புடன் சிவனா ரருளினைப் புகழ்ந்து
தென்பெரு மங்கை திருநகர்க் கன்று

நாக மானகரை நணுகியே பரவி
வாகையாய்க் கலையு மாடைபூ ஷணமும்

மற்றுமே பொருளும் வாம்பரி முதலாய்
பெற்றுவந் திருந்து பெண்ணினுக் காகிப்

பரவையை மருவி பரமரைப் பணிந்து
விரவுசுந் தரனார் விளங்குகின் றனரே!

## வசனம்

"அந்த சமயத்திலே சேரமான் கழற்றெறிநாயனார் வருகிற விதமெப்படியென்றால்," (93)

## விருத்தம்

127. சந்திர வேணி யீசன்
தன்திரு வருளி னாலே
சுந்தரர் தம்மைக் கண்டு
தோழமை செய்ய வேண்டி
சிந்துரக் கன்று மாவும்
சேனையும் சூழச் சேரன்
இந்திரன் என்ன வாரூர்க்
கினிதெழுந் தருளி னானே!

## தரு

128. சத்திர சாமரை சூழத்
தமனியக் கிரீடம் சூடிச்
சித்திர மன்மத னென்ன
சேரன் வந்தனர் பாரீர்!

கோட்டையெனச் சேனை சூழ
கொற்றவர் போற்றி கொள்ள
நாட்டை விட்டுக் கழற்றெறி
நாயனார் வந்தனர் பாரீர்!

## வசனம்

" இப்படியாகச் சேரமான் கழற்றெறி நாயனார் வருகிறபோது சுந்தரர் எதிர்கொண்டு வந்து, ஒருவர்க்கொருவர் வணங்கி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு, சுவாமியாரைச் சேவித்துப் பரவை வீட்டுக்கு வந்து இருவருஞ் சாப்பிட்டு சரசசல்லாப மாய், பந்தாடல் ஆட்டுக்கி யடாய்ப்போர் கோழிப்போர் இந்த வேடிக்கை பார்கிற விதமெப்படி யென்றால்," (94)

## தரு-பதம்

129. கன்னிமார் முலைகண்டு துள்ளல் போலச் சரீல் சரீலெனக்
கையில் பந்துகள் எழும்பல் பாரையா!

தோகைமார் கால்கண் டோடல்போல் துரீல் துரீலெனச்
கோட்டியால் அடிபந்து பாரையா!

மதுகைடவர்கள் பொருதல் போலவே படீல்படீலென
வளர்கிடாய் நின்றுபாய்தல் பாரையா!

கறங்குமோர் சுழல்காற்றுப் போலவே
சுறீல்சுறீலென காலினால் பொருங்கோழி பாரையா!

## வசனம்

"இப்படியாக அந்தச் சமயத்திலே மல்லர்கள் வருகிற வித மெப்படியென்றால்," (95)

## விருத்தம்

130. சிங்கநேர் பொறாத வல்லார்
செங்கையில் வாளுக் கெல்லாம்
பொங்கமா இருப்புக் கோதை
புனைந்தவர் சணாக் கத்தி
அங்கையிற் கொண்டு செம்மண்
அடங்கலு முடலிற் பூசி
வெங்களி ரென்ன மல்ல
வீரரும் வருகின்ற றானே!

(கோதை - கையில் கணியும் தோற் கவசம், சாணா - கூர்மையான)

## தரு

131. சல்லடமு மிட்டுப்
பட்டுக் கச்சை பிகிச்சு கட்டி
கையிற் சாணாக் கத்திக் கொண்டு
மட்டிக் குல்லா தரித்து
வல்லமையாய் மெள்ள மெள்ள
அசைந்து நடந்துசெய
மல்ல வீரர் ரிஷபமென்ன
வந்தனர் பாரீர்!

(பிகிஞ்சு - இறுக்கி)

## வசனம்

"இப்படியாக, ஒருவர்க்கொருவர் மல்லு யுத்தம் பண்ணுகிற விதமெப்படியென்றால்" (96)

## தரு

132. கரியார் இடிமுழக்க மென்னவே முகுமுகு
சிங்க கர்ஜனை செய்தல் பாரையா!

அண்டபே ரண்டம் சிறகடித்தல்போல் பளீல் பளீலென
கையினால் தொடைதட்டல் பாரையா!

புலியும் புலியும் எதிர்த்து நோக்கல்போல் கடிகடி யென
புசங்கள் கொட்டியே பாய்தல் பாரையா!

துதிக்கை யானைகள் வளைத்து வருதல்போல் -
மௌ மௌ மௌ
சுத்தி விடையும் வருதல் பாரையா!

உலக தாதையைக் குமரன் புடைத்தல்போல் - நிறநிறவெனக்
கட்டிக் கையினால் நெறித்தல் பாரையா!

வாலி சுக்கிரீவர் பொருதல் போலவே - வகை வகை வகை
மல்லுப் போருகள் செய்தல் பாரையா!

## வசனம்

'இப்படியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிற நாளிலே நடக்கிற விதமெப்படி யென்றால்," (97)

## திபதை

133. இருவருஞ் சிலநாள் இவ்வித மிருந்து
மருவியே தியாகர் மலர்ப்பதம் வணங்கி
உகந்துடன் திருவா ரூரினை விடுத்து
மிகுந்தசீர் வளவர் விளங்கிநா டனைத்தும்
பாண்டிநா டனைத்தும் பரமர்தம் பதிகள்
ஈண்டியே பரவி இசைத்தமிழ் பாடி
மற்றுமே திரும்பி வந்துதான் தியாகர்
உற்றவர் திருவா ரூரினில் எய்தி
பின்னுமே சிலநாள் பிரிவிலா திருந்து
மன்னு சேரலர்கோன் வருந்தியே யழைக்க
மின்னாள் பரவை விடைதர வகன்று
நன்னய மலைய நாட்டினை நோக்கித்

துணையதா யனேகர் சூழ்ந்துவந் தருள
இணைவிடா திவர்க ளேகியப் போது
பண்ணு காவேரி பளிங்குமா மலைபோல்
தண்ணிலே குடபாற் றதும்பித்து நிற்க
வடகரை யிருந்து வடிந்தகீழ்த் திசையில்
தடமதாய் நடந்து தானனகள் தொடரச்
சென்றுதான் வகைமைத் திருவையா றதனை
வென்றியாய்ப் பரவி மீண்டுவந் தருளி
கொங்குநா டகன்று குடகு கேரளத்
திறங்கியே சிலநாள் தருக்கியே யிருந்து
சேரமான் கொடுக்கும் திரவிய மனைத்தும்
பாரமா யலைத்துப் பற்றியே கொணர
ஆண்டெழுந் தருளி ஆரூரர் முருகன்
பூண்டியி லடைவில் புக்கிவந் தனரே!

## வசனம்

"இப்படியாகத் திருமுருகன் பூண்டிக்கு வடபாலிற்காட்டிலே வருகின்றபோது பரமேசுவரர் ஏவலினாலே வேடர் வருகிற விதமெப்படி யென்றால்," (98)

## குறுந்தாழிசை

134. திருமுருகன் பூண்டியில் வாழ்
சிவசிவா நமக்கபயம்
மருகிலேமற் றுடைமையெல்லாம்
ஐயகோ பறிகொடுத்தேன்!

சேரமான் தந்த திரவியநிட் சேபமெல்லாம்
சேரவே யங்கங்கே திரண்டொன்றாய்ப் போச்சுதையா!
முத்தனையாள் என்பரவை முத்துமுகந் தனக்கொக்கும
முத்து மூக்குத்தியொன்று முன்னூறு பொன் பெறுமே!

சித்திரப் பொற் செவிகளும் செம்பவள மாலைகளும்
சத்திரசா மனரவிலையுந் தனித்தனியா யிரம்பெறுமே
எத்தனையோ பொன்னாடை எத்தனையோ மின்னாரம்
எத்தனையோ வீணாகிப் பறிபோச்சே!
இத்தனையும் போச்சென் றிரங்கிலைகாண் கோழிகிடாய்
தத்தைமுதற் போனதற்கே தத்தளிக்கு தென்மனங்காண்
ஏது செய்வேனையா? இனிப்பரவைக் கென்சொல்வேன்?
நீதயவு செய்யாதிருந்தால் நின்னைவிடுத் தேகேனே!

## வசனம்

"இப்படியாகச் சன்னதிக் கெதிரே நின்று சிலது வசனங்கள் சொல்லித் திரும்புகிறபோது போனவுடைமையெல்லாம் மலைபோல குவிந்திருக்கிறதைக் கண்டு ஆளுகள் கையிலே எடுப்பித்துக் கொண்டு திருவாரூருக்குப் போகிற விதமெப்படி யென்றால்" (99)

## விருத்தம்

135. பரமனா ரருளி னாலே
பரிசனம் பலரும் சூழத்
தரமதாய்த் திருவா ரூரில்
தலத்துளா ரெதிர்கொண் டேத்த

திரமதாய்த் தியாக ராயர்
திருவடி தான்றி னைந்து
பரவையார் தமது வீட்டிற்
பரிவுட னெய்தி னாரே!

## வசனம்

"இப்படியாகப் பரவையாருடனே கூடியின்பம் மகிழ்ந்திருந்து தினமுஞ் சுவாமியாரைச்சேவித்துக் கொண்டிருக்கிற நாளிலே மீண்டும் மலையாளத்துக்குப் போகிற விதமெப்படி யென்றால்," (100)

## திபதை

136. சேரமான் பரிவுஞ் சித்தத்தி லன்பு
மோருயி ரெனவே யுகந்ததோ ழமையுந்
தயவுமிங் கிதமும் சாத்துவீக குணமும்
நயமும்நல் லறிவும் நண்புமா தரவும்
நேசமும் நெறியும் நீதியும் சிவனார்
பூசையும் பக்தியும் போதமும் குடையும்
நெஞ்சிலெப் பொழுதும் நினைந்துள் முருகி
தஞ்சமாய் மலையஞ் சாரவே கருதி
தங்கைவே ணியானார் கருணையைப் பரவி
நங்கையார் விடையும் நல்கியே கொண்டு
வீறியே நடந்து வினைகடந் தகன்று
தேறியே சொரூபஞ் செங்கதி ரொளியாய்
பரிவினா லுகந்து பரிசனஞ் சூழ
அரியபுக் கொளியூ ரவனாகி மேவி
முதலையை விழுங்கு மூவிரு வயது
மதலையை மீளவரச்செய்து கொடுத்து
கொங்குநா டகன்று குடகுகே ரளத்தி
லெங்கள்சே ரலர்கோன் எதிர்கொள்ள எய்தி
ஒருவருக் கொருவர் உசுப்பினால் வணங்கி
ஒருவருக்கொருவர் உடலுறத் தழுவி
சிறிதுநாள் மகிழ்வாய் சேரவே யிருந்து
பிறிதுதம் பதிகள் பெயர்ந்துபோய் வணங்கி
வஞ்சியங் களத்தில் வந்துசுந் தரனார்
தஞ்சமாய்ச் சிவனார் சரணபணிந் தனரே!

## வசனம்

"இப்படியாத் திருவஞ்சைக் களத்துச் சுவாமியாரைப் பணிந்து பரவிப்பாடி, சுந்தரரிருக்கிறபோது, கயிலாயத்திலே யிருந்து வெள்ளையானை வருகிற விதமெப்படி யென்றால்," (101)

## வெள்ளை யானை அனுப்புதல்!
## விருத்தம்

137. சுந்தரர் தன்னை முன்னே
        தொண்டினுக் கிசைக்க வேண்டி
சிந்தையிற் கருதி யாதி
        சிவபிரான் கணங்கள் தன்னை
இந்திரன் தன்னை வானில்
        இறையவர் தம்மைக் காட்டி
அந்திவெண் கயிலை நேர்வெள்
        ளானையை யனுப்பி னாரே!

## பதம்

138. வெள்ளையானை வருகின்ற வேடிக்கை பாரீர்!
கள்ளுலாவு மலர்க்கொன்றை கன்னல்வேணி சூலபாணி
வள்ளலானோர் சுந்தரனார் வருவதற்கு வரவிடுத்த
(வெள்ளை)

தன்னைத்தேடிச் சுந்தரனார் தான்வந்தெய்தத் தரமல்ல
வென்னவெள்ளி மலைதானெய்தி ஏற்றிக்கொடு போதல்போல
(வெள்ளை)

## வசனம்

"அந்தச்சமயத்திலே சுந்தரருடனே சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (102)

## தரு

139. புவனமெல்லாம் போற்றி செய்யும்
        புனிதனார் தோழரே கேளீர்
தவமிருந்து சிவக ணங்கள்
        தங்கட்கெல்லாம் தலைமை செய்ய
அவனிவிடுத் தம்புயச்சே
        வடிக்கீழ் வருக வென்றே
சிவபெருமான் அருளிப் பாடு
        செய்தனர்நீர் வருகு வீரே!

## வசனம்

"இப்படியாகச் சிவகணங்கள் சொன்னபோது சுந்தரர் வெள்ளையானையை முக்கால் வலம் வந்து சேவித்து, வெள்ளையானை மீதிலேறிக்கொண்டு கேசரமார்க்கமாய்ப் போகிறபோது சேரமான் கழற்றெறி நாயனாரை நினைந்து சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (103)

## விருத்தம்

140. ஓருயி ராகி யென்று
மொருமன தாகி யெந்த
னாருயிர் தோழ னாகி
அடிகளு மாகி யெங்கள்
சீருயர் சேர மான்கைத்
திருவிடை வாங்கி டாமற்
சாருதற் கொடிய நெஞ்சே
தருமதோ சாற்றி வாயே!

## வசனம்

"இப்படியாகக் கேசமார்க்கத்திலேயே போகிறபோது , சுந்தரர் சொன்ன வசனத்தை கொடுங்கோளுரிலே யிருந்த சேரமான் கேட்டு, அறிந்து கொண்டு எண்ணெய்த் தலையுமாகக் குதிரை ஏறி வருகிற வித மெப்படி யென்றால்," (104)

## பதம்

141. வருகிறான் சேரமான் பாரீர்!
வருகவே இன்பஞ் தருகவே - சிந்தை
உருகவே மகிழ்வு பெருகவே! (வருகிறான்)

வண்ணத் தலைவர்க ளெண்கணத் தலைமையின்
திண்ணைத் தலையிருஞ் தெண்ணெய்த் தலையுடன்
(வருகிறான்)

மண்டலம் யாவையும் விண்டலம் யாவையும்
கண்டுகொண் டாடவே கொண்டுகொண் டாடியே
(வருகிறான்)

வருகிறான் சேரமான் பாரீர் - குதிரைமேல்
வருகிறான் சேரமான் பாரீர்!

## வசனம்

"இப்படியாகக் குதிரையை வையாளி விட்டுக் கொண்டு நிமிஷத்திலே வந்து கேசர மார்க்கத்திலே போகிற வெள்ளை யானையைப் பார்த்து குதிரையின் வலச் செவியிலே பஞ்சாட்சரத்தை உபதேச ம் பண்ணி , ஆகாச கமனம்பண்ணி வைத்து, வெள்ளை யானையை பிரதிட்சிணம் வந்து, முன்னே நின்று சேவித்த போது சுந்தரர் சொல்லுகிற வசனம் எப்படியென்றால்" (105)

## விருத்தம்

142. என்னா ருயிர்போல் வருந் தோழா
ஈசனருளை யென்ன சொல்வேன்
நின்னாண்மையும் நின்னறி வினையும்
நிகழ்த்த வொருவர்க் கரிதையா
மின்னார் சடையார் வடகயிலை
மேவக் கருதி மனமதனில்
உள்ளா முனமே வந்துநின்றார்
உனக்கு நிகரோ ஒருவருமே!

(உன்னா - நினைக்கா)

## வசனம்

"சேரமான்சொல்லுகிற வசனமெப்படி யென்றால்," (106)

## விருத்தம்

143. எல்லா முனது திருவருளே
ஈசன் வேறு நீவேறோ?
சொல்லாய் வில்லாய் மலைவளைத்த
சுரர்நா யகனைத் தூதுவிட
வல்லாய் பரம கதிக்கேழு
மார்கந் தன்னில் மறவாமல்
சல்லா பமதாய் நீநினைக்க
தவமென் செய்தேன் தமியேனே!

## திபதை

144. இத்திற மிவர்க ளிருவரு மொழிந்து
மைத்திறக் களத்தார் மலரடி நினைந்து
தெக்கண மதனிற் றினகர னெழுந்து
தொக்கவே யதின்பொற் சுடரொளி விளங்கச்
சுந்தரர் தவளத் தும்பிமேல் வருக
சுந்தர ... பின்னே தொடர்ந்து
தேசவாம் பரிமேல் சேரமான் வருக
வீசுபூங் கயிலை வெற்பினி''லெய்தி
திங்கள்வே ணியனார் திருவருள் புரிய
சங்கரி யருளாற் சங்கிலி பரவை
நங்கையு மவர்பால் நணுகினர் தாமே

## வாழி!

145. நத்தியே நடிப்பவர் நடத்திற் காண்பவர்
முற்றுமே படிப்பவர் முழுதும் கேட்பவர்
மற்றுமிக் கதைதனை வரைந்து கொள்பவர்
கற்றைச்செஞ் சடையார்தங் கயிலை சேர்வரே

வாழி திங்கள்மும் மாரி பெய்திட
வாழி வையக மனைத்து மோங்கிட
வாழி சைவமும் நீறும் வீறிட
வாழி யாகம வேதமும் வாழி வாழி!

வாழிய திவ்விய பாலம ....னகர்
வாழி தண்டக மாலை மாநகர்
வாழி அம்பிகை வாழ வந்தவள்
வாழி சத்திய வாசகர் வாழிவாழி!

## மங்களம்!

146. மங்களமே செய மங்களமே!
கறையணி கண்டற்கும் கலியுக ராயற்கும்
பிறையணி சடையற்கும் பிஞ்ஞுகற்கும்
தரவுவெள் விடையற்கும் சந்திர சேகரற்கும்
மாவையில்வாழ் சத்திய வாசகர்க்கும்
கன்னிய ராசிக்கும் கற்பக வல்லிக்கும்
நன்னுதல் சௌபாக்ய நாயகிக்கும்
மங்களமே - செய - மங்களமே!

நூல் முற்றும்

Printed by
**Royapettah Stationery and Printing and Allied Products**
**Producers Indl. - Co.op Society Ltd.**
26, Koya Arunagiri First Street Royapettah
Madras - 600 014. ☎ : 84 56 70